Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 6 ஜீன் 2008




**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

© 04257 - 230030, Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. வேதாகமம், தேவ ஆவியினால் அருளப்பட்டது ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. நாம் ஏன் அந்நியரை உபசரிக்க வேண்டும் ........ 28
8. தேவனை மகிமைப்படுத்துங்கள் ........ 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 21 JUNE - 2008 Issue - 6


ஆசிரியர் உரை

## "எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான்"

இப்பூவுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் "மகிழ்ச்சி" யைப் பல வகைகளில் பெற்றுக் கொள்ளுகிறான். எந்தெந்த வகைகளில் அப்படிப் பெற்றுக் கொள்ளுகிறான் என்பதற்கு ஒரு நீண்ட பட்டியலை நம்மால் கொடுக்க முடியும். இப்பட்டியல், மனிதனுக்கு மனிதன் வேறுபடக்கூடும். இங்கே, இரண்டு வகைகளில் மனிதன் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சி குறித்து மேலோட்டமாக நான் குறிப்பிட விரும்புகிறேன். **முதல் வகை,** தான் ஒன்றுமில்லாதிருக்கையில், தனக்குத் தேவைப்படுபவைகளையும், தான் ஆசைப்படுபவைகளையும் பெற்றுக் கொள்வதால் வரும் மகிழ்ச்சி. **இரண்டாவது வகை,** தன்னுடைய உழைப்பாலும், முயற்சியாலும், சாதுரியத்தாலும் அப்படிப் பெற்றுக் கொண்டவைகளை, ஏதாவது ஒரு காரணத்தினிமித்தம், இழந்து, பிறகு அவைகளைத் திரும்பப் பெறுவதின் மூலம் வரும் மகிழ்ச்சி. இந்த இரண்டு வகைகளில், முதல் வகை மகிழ்ச்சியைக் காட்டிலும், இரண்டாவது வகை அலாதியானது மற்றும் சிறப்புக்குரியது.

நான் இங்கே கூறும் மகிழ்ச்சியின் ஆழத்தை உணர்ந்தபடியால் தான், இழந்து போன மனிதனை மீட்கும் திட்டத்தையே தேவன் தீட்டியுள்ளார் என்று தெரிகிறது. " எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் **பிரியமாயிற்று"** (1கொரி 1:21). தேவனுக்குப் பிரியமாயிற்று என்பதும், தேவனுக்கு மகிழ்ச்சியாயிற்று என்பதும் கிட்டத்தட்ட ஒன்று தானே. நமது இயேசு

ஆண்டவரும் கூட அதற்காகத்தான் இப்பூமிக்கு வந்தார். ஏனெனில், "இழந்து போனதைத் தேடவும் திருப்பிக் கொள்ளவுமே (இரட்சிக்கவுமே) மனுஷ குமாரன் வந்திருக்கிறார்" (லூக் 19:10) என்று வேத வசனம் கூறுகிறது. அத்தோடு இயேசுவானவர் இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களிலும் **திரும்பப் பெறுவதின் மேன்மையை** உணர்ந்தவராகவே உபதேசித்திருக்கிறார். இல்லாவிட்டால், காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்ட **ஆடு, காசு, குமாரன்** ஆகிய உவமைகளைச் சொல்லியிருக்கமாட்டார் (லூக். 15ம் அதி).

இதெல்லாம் சரிதான், ஆனால், இந்தத் தாவீதுக்கும் திருப்பிக் கொள்ளுதலுக்கும் அப்படி என்ன சம்பந்தமிருக்கிறது என்று தானே கேட்கிறீர்கள்? கவனியுங்கள். ஈசாயின் குமாரர்களில் ஒருவனாக இருந்து, ஒட்டுமொத்த இஸ்ரவேல் ராஜ்ய பாரத்தில் புகழ் மணம் பரப்பிய தாவீதின் வாழ்க்கையை நாம் பொத்தாம் பொதுவில் பார்த்தால், வெற்றி வேந்தனாகத் திகழ்ந்த இவன் "திருப்பிக் கொள்ளுமளவுக்கு" எதையும் இழக்கவில்லையே என்பது போலத் தோன்றும், ஆனால், நெருங்கிப் போய்ப் பார்த்தால், **இவன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் இழந்து, அழுது, தவித்து, பிறகு திருப்பியிருக்கிறான்** என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

நான் சொல்லும் இச்சம்பவம், 1 சாமுவேல் நூலின் இறுதிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இந்நூலின் முக்கிய இடத்தைப் பிடிப்பவர்கள் மூன்று பேர். அவர்கள், இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியாகவும், முதல் தீர்க்க தரிசியாகவும் தேவனுக்கு மனமார சேவை செய்த **சாமுவேல்**, தகப்பனின் கழுதையைத் தேடிச் சென்ற போது (1சாமு. 10:14). தேவனுடைய ஜனங்களுக்கு முதல் ராஜாவாகும்படியான மாபெரும் சிலாக்கியம் பெற்றும் அதைக் காப்பாற்றிக் கொள்ளக் கையாலாகாத **சவுல்.** மற்றும், அடுத்த ராஜா என்று தெரிந்தெடுக்கப்பட்டு, அபிஷேகமும் செய்யப்பட்டு, அதே வேளையில், அதற்கான அங்கீகாரமும், அந்தஸ்தும் பெறாத நிலையிலிருந்த நம்முடைய **தாவீது.**

இந்த தாவீது தன் வாழ்வில் இழந்து திருப்பிய சம்பவம் 1 சாமுவேல் 30-ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. சவுல் ராஜாவின் ராஜ்யபாரத்திற்கான அஸ்தமனம் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் அது. தாவீதும், அவனோடிருந்த ஒரு கூட்ட மனிதரும், ஒரு சமயம் வெளியே சென்றிருந்தார்கள். அவர்கள் திரும்பி வந்த போது, ஒரு பேரதிர்ச்சி அவனுக்கும், அவன் மனிதருக்கும் காத்திருந்தது. ஆம், தாவீதின் மனைவி மக்களும், அவனோடிருந்தவர்களின் மனைவி மக்களும் குடியிருந்த "சிக்லாக்" பட்டணத்தை அமலேக்கியர்கள் கொள்ளையடித்து அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த ஸ்திரீகள், சிறியவர்கள், பெரியவர்கள் என்று எல்லோரையும் ஏகமாய் சிறைப்பிடித்து போய்விட்டார்கள் (30:1-3). அமலேக்கியரின் இந்த ஆட்டம், பழிக்குப் பழிவாங்கும் ஒரு செயலாகத் தெரிகிறது. எப்படியெனில், 1 சாமு 27:8,9 வசனங்களில், தாவீதும், அவன் மனிதரும் அமலேக்கியர்களுக்கு எதிராகப் படையெடுத்து, அவர்களைக் கொள்ளையிட்டு, கொன்று போட்ட காரியம் சொல்லப்பட்டிருக்கிறது.

சரி, தாவீதும் அவன் மனிதரும் சிக்லாகிற்குத் திரும்பி வந்து தங்கள் பட்டணம் சூறையாடப்பட்டுத் தங்களுடைய மனைவி, மக்கள் சிறைப் பிடிக்கப்பட்டார்கள் என்று கண்டபோது, "**அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதிருக்கிறார்கள்**" (30:4). வேதாமத்தில் துக்கப்பட்டு அழுத சம்பவங்கள் பல உண்டு. மகன் இஸ்ம வேலுக்கான ஆகாரின் அழுகை (ஆதி 21:16), குழந்தைக்கான அன்னாளின் அழுகை (1 சாமு 1:10). இயேசு ஆண்டவரையே கண்ணீர் விடச் செய்த, சகோதரனுக்கான மரியாளின் அழுகை (யோவான் 11:33) என்று. ஆனால், இவர்களில் யாருமே அழுகிறதற்குப் பெலனில்லாமல் போகுமளவு அழுதார்கள் என்று வேதாகமம் கூறுவதில்லை. தாவீதும், அவன் மனிதர் களும் அப்படி அழுதிருக்கிறார்களென்றால், அவர்கள் எவ்வளவு காயப் பட்டு, நொறுக்கப்பட்டிருப்பார்களென்று எண்ணிப்பாருங்கள். துயரத்தின் உச்சமாக சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கி லேசமானதினால், தாவீதைக் கல்லெறிய வேண்டுமென்று சொல்லிக் கொண் டார்கள் (30:1) தங்களால் தலைவனாகவும், இராஜாவும் ஏற்றுக் கொள்ளப் பட்ட தாவீதைக் கல்லெறிந்து கொல்லக்கூட நினைத்திருக்கிறார்கள் உடனி ருந்தவர்கள். வாழ்க்கையின் துயரம் தலைக்கு மேல் போகும் போது, மனிதன் தன் நிலையை இழந்து விடுகிறான் என்பதற்கு இது சரியான சான்றாக உள்ளது.

ஆனால், "என் இருதயத்திற்கேற்ற தாசன்" (அப். 13:22) என்று தேவனிடத்திலிருந் நற்சாட்சி பெற்ற நம்முடைய தாவீதின் சிறப்பு இந்த இடத்தில் சீறி வருகிறது. ஆம், கூட இருப்பவர்கள், தன் நம்பிக்கைக் குரியவர்கள் தனக்கு எதிராகத் திரும்பும் நிலையைச் சந்தித்த போது, தாவீது செயல்பட்ட விதம் பற்றி வசனம் சொல்லுவதைத் தயவு செய்து கவனியுங்கள் "... **தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டதோடு** 8-ம் வசனத்தைப் பார்த்தால், "**தாவீது கர்த்தரை நோக்கி நான் அந்தத் தண்டைப்பின் தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனோ?" என்றும் கேட்டுள்ளான்**. எப்படிப்பட்ட சூழ்நிலையில், தாவீது கர்த்தரை நாடியிருக் கிறான், கர்த்தருக்காக காத்திருந்திருக்கிறான் என்று அப்படியே எண்ணிப் பாருங்கள்!.

கர்த்தருக்குள்ளாகத் தன்னைத் திடப்படுத்திக் கொண்ட நம் தாவீதுக்கு தேவன் பதில் கொடுத்தார், "**அதற்கு கர்த்தர் அதைப் பின் தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார்**". இந்த வாக்கு அப்பொழுது தாவீதுக்கு எப்படியிருந்திருக்கும்? தவித்த வாய்க்கு தண்ணீர் கிடைத்தது போலவும், சொல்லப்போனால், அதைவிடப் பன்மடங்கு மேலான தாகவும் இருந்திருக்கும். உண்மைதானே! **கர்த்தரே வாக்குக் கொடுத்து விட்டார்**. இனி வெற்றி தான் என்ற குதூகல உணர்வு குதித்து எழும்பி யிருக்கும். பெருத்த நம்பிக்கையோடு அவனும் அவனோடிருந்த 600 பேரும் புறப்பட்டுப் போனார்கள். ஆனால், பேசோர் ஆற்றண்டை போன போது, அதைக் கடக்க முடியாமல், 200 பேர் விடாய்த்துப் போனவர்களாகப் படுத்துக் கொண்டபடியால் தாவீது 400 பேரோடே போக வேண்டியதாயிற்று.

**கர்த்தருடைய வாக்கை நம்பித்தான்** புறப்பட்டுப் போனான். ஆனால், பேசோர் ஆற்றண்டையில் **முதல் சோதனை.** ஆம், மூன்றில் ஒரு பகுதி அவுட். எந்த ஒரு திட நெஞ்சுக்காரனையும் இப்படிப்பட்ட சூழ்நிலை சோகத்தில் ஆழ்த்திவிடும். அமலேக்கியரைப் பின் தொடர்ந்து சென்று மனைவி மக்களை மீட்டுவரத் தன்னோடிருக்கும் 600 பேர் போதுமென்று தாவீது எண்ணியிருந்தால், இவன் கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்கக் காத்திராமல், செய்தியறிந்தவுடன் உடனடியாகப் புறப்பட்டுப் போயிருந் திருப்பான். ஆனால், போதாது என்று கருதியதால் தான், கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்டுப் புறப்பட்டான். இப்பொழுது அதிலும் மூன்றிலொரு பங்கு காலி. எடுத்த காரியம் என்ன ஆகுமோ என்று பயப்படும் நிலை. கர்த்தரின் வாக்குப் பலிக்காதோ என்று சந்தேகப்படும்படியான ஓர் நிலைமை. அதுதான் போகட்டும் அடுத்ததாகிலும், நன்றாக நடக்குமா என்று பார்த்தால், அதிலும் ஒரு சுணக்க நிலைமையே எதிர் வருகிறது.

ஆம், அமலேக்கியரைப் பின்தொடர்ந்து சென்று, வெற்றி பெற, துப்புக் கொடுக்க **ஒரு சரியான ஆள்** கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணிய போது, அப்படி ஒருவன் கிடைக்காமல், இராப்பகல் மூன்று நாள் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், **உயிர்போகும்** நிலையிலிருந்த ஓர் எகிப்தியனைக் கண்டுபிடித்து அவனைத் தாவீதினிடத்தில் கொண்டு வந்தார்கள். தாவீதுக்கிருந்த அந்தச் சூழ்நிலையில் நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? கொண்டு வந்தவர்களைக் கடிந்து, இவனைத் துரத்தி விட்டு, போய் உருப்படியான ஒருவனைக் கொண்டு வாருங்கள் என்று கத்தி யிருப்போம். உண்மைதானே. ஆனால், தாவீது அப்படிச் செய்யவில்லை. மாறாக, அத்திப்பழ அடையும், திராட்சைப் பழக் குலைகளும் கொடுக்க ஆணையிட்டு, அவன் உயிர் அவனுக்குள் திரும்பி வர ஏற்பாடு செய்தான் (30:11,12). இதன் மூலம் இக்கட்டான அந்த சூழ்நிலையிலும் மோசேயின் பிரமாணப்படி நடக்க தன்னை ஒப்புக்கொடுத்தான் (உபா. 10:18,19).

பிறகு, உயிர் பெற்ற எகிப்தியனை **விசாரித்த போது**, அவன் கொள்ளை யடித்துப் போன அமலேக்கியர்களில் ஒருவனுக்கு வேலைக்காரனாயிருந்து, வியாதிப்பட்டதினிமித்தம் விரடப்பட்டவன் என்று தெரிந்தது (வ13). தொடர்ந்து கீழே வாசித்தால், இந்த எகிப்திய அடிமை, தாவீதினிடத்தில் ஆணை வாங்கிக் கொண்டு, தாவீதின் ஆட்களை, **"கொள்ளையினிமித்தம் ஆடிப்பாடி, குடித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்த" அமலேக்கி யரண்டை** கூட்டிச் சென்றான் (வ15-17). பிறகு என்ன கேட்கவா வேண்டும்? ஆட்டைக் காப்பாற்ற சிங்கத்தின் வாயைப் பிளந்த தாவீது (1 சாமு 17:34,36) மனைவி மக்களைக் காப்பாற்ற சும்மாவா இருந்திருப்பான்? ஒட்டகங்கள் மேல் ஏறித் தப்பிப்போன நானூறு பேரைத் தவிர ஏனைய அனைவரையும், சங்கரித்து, **"அமலேக்கியர் பிடித்துக் கொண்டு போன எல்லாவற்றையும், தன்னுடைய இரண்டு மனைவிகளையும், தாவீது விடுவித்தான்"**. அவர்கள் கொள்ளைக் கொண்டு போன எல்லாவற்றாலும், சிறியதிலும், பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும் ஒன்றும் குறைபடாமல் **எல்லாவற்றையும்**

**தாவீது திருப்பிக் கொண்டான்** (30:18,19). இதுதான் இச்சம்பவத்தின் சுருக்கம்.

இப்பொழுது, இழந்து போன எல்லாவற்றையும் திருப்பிக் கொள்ள ஆசைப்படும் நமக்கு இதிலிருந்து என்ன பாடங்கள் கிடைக்கிறது என்று பார்ப்போம்.

## I. கர்த்தரின் வாக்கை நம்பிப்போன நிலையிலும் சோதனை

"தாவீது எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டான்" என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் **முதல் பாடம்,** ஒருவன் கர்த்தரின் வார்த்தைகளை ஏற்று செயல்படும் போது கூட, சோதனைகள் இருக்க வாய்ப்புண்டு என்பது.

பல நேரங்களில் நாம் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து அதனடிப்படையில் செயல்படும்போது, எல்லாமே சுமுகமாக நடைபெற வேண்டும், வாழ்க்கைப் பாதையில் எந்தப் பிரச்சனையும் எதிர்வரக்கூடாது என்று நினைக்கிறோம். ஆனால், அப்படிப்பட்ட நினைப்பு சுத்தமாகத் தவறு என்று இங்கே அப்பட்டமாகத் தெரிகிறது.

கடுமையான நெருக்குதல் வந்தபோது, தன்னை கர்த்தருக்குள்ளாகத் திடப்படுத்திக் கொண்ட தாவீது, அடுத்து என்ன செய்ய வேண்டுமென்பதற்குத் தன்னுடைய அறிவு, ஞானம், திறமை, தைரியம், பெலன் என்று எதற்கும் இடங்கொடாமல், கர்த்தரிடத்திலே ஆலோசனை கேட்டான் (30:6). அன்றைக்கு ஆட்சி பீடத்திலிருந்த சவுல் ராஜா, இது போன்ற ஒரு சூழ்நிலையில், தேவனிடத்தில் கேட்டபோது உத்திரவு தராத தேவன், இங்கே தாவீதுக்கு உடனடியாக உத்திரவு கொடுத்தார் (30:7) இப்படி கர்த்தரின் வாக்கை நம்பிப்போன போது தான் தன்னோடிருந்தவர்களால் சோதனை (30:9,10). பேசோர் ஆற்றைக் கடந்து செல்ல 200 பேர் மறுத்து விட்டனர்.

கூட இருப்பவர்கள் குழிபறித்ததால் வந்த இந்தச் சோதனைக்கு தாவீது தேவனைக் குறை சொல்லவில்லை. சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல (யாக். 1:13) என்ற யாக்கோபின் வார்த்தைகளின் பொருள் தாவீதுக்கு அன்றைக்கே பரிச்சயமாயிருந்திருக்கிறது. ஆகவே, தாவீதுக்கு ஏற்பட்ட இந்த நிலையில் அவன் சோர்ந்து போகாமல் இருக்கிற 400 பேரோடு தொடர்ந்து போனான்.

அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் நாம் கர்த்தருடைய வாக்கை நம்பிச் செயல்படும் போது, அதாவது, இது தான் சத்தியம், இதுதான் தேவக்கட்டளை, இதுதான் வசனத்தின் போதனை, இது தான் உண்மையான சபை, இது தான் சரியான ஆராதனை, இதைத்தான் தேவன் இந்த இடத்தில் சொல்லுகிறார், நான் இப்படிச் செய்ய வேண்டுமென்று தான் தேவன் எதிர்பார்க்கிறார் என்று நம்முடைய பக்திப் பயணத்தைத் தொடங்கும் போது, பிசாசு, கூட இருப்பவர்களால் நம்முடைய

பரலோக பயணத்தைத் தடை செய்ய முயற்சிப்பான். அவர்கள் நம்முடைய பெற்றோராக இருக்கலாம், உடன் பிறந்தவர்களாக, உற்ற நண்பர்களாக, நம்பிக்கைக்குரியவர்களாக, நமக்குத் துணை நின்றவர்களாக இருக்கலாம். தந்திரக் காரனாக இருந்து வஞ்சிக்கும் குணம் கொண்ட பிசாசு (2கொரி. 11:3) இப்படிப்பட்டவர்களைத் தான் பயன்படுத்துவான். ஆனால், நாம் கர்த்தரின் கட்டளைகளையும், கிறிஸ்துவின் உபதேசத்தையும் நிறைவேற்றுவதில் எப்பொழுதும் முனைப்பாக இருக்க வேண்டுமேயொழிய ஒரு போதும் முடங்கி விடக் கூடாது.

ஆம், எப்படிப்பட்ட சோதனையாக இருந்தாலும் ஒரு கை பார்க்க நாம் தாவீது போல நம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். பவுலடியார் கொரிந்தியருக்குச் சொன்ன தேவ ஆலோசனையை நாம் மறவாமல் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். **மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே யல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படு கிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்** (1 கொரி.10:13) என்று.

## II. சோதனையின் மத்தியிலும் கர்த்தரின் உதவி

"தாவீது எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டான்" என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் **இரண்டாவது பாடம்**, சோதனையான நேரத்தில் உண்மை யுள்ளவர்களாக இருந்தால், தப்பிக் கொள்ளும்படியான போக்கை தேவன் உண்டு பண்ணுகிறார் என்பது.

சில நேரங்களில் சோதனையை அனுமதிக்கிற தேவன், அந்தச் சோதனையை நாம் எப்படி எடுத்துக் கொள்ளுகிறோம், சோதனையான நேரத்திலும் அவருடைய காரியமாக நாம் எப்படி நடந்து கொள்ளுகிறேம் என்று கவனிக்கிறார். யோபுவைச் சோதிக்க சாத்தானுக்கு அனுமதி தந்த தேவன் (யோபு 1:12) யோபுவின் மேல் கவனம் வைத்திருந்தார் (யோபு 42:7). எல்லா வற்றையும் இழந்த யோபு இறுதி வரைக்கும் உறுதி காட்டினார். "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையா யிருப்பேன்; ஆனாலும், என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்" (யோபு 13:15) என்று விசுவாச முழக்கமிட்டார்.

அமலேக்கியரைப் பின் தொடர்ந்து வெற்றி கொள்ளும்படி போன தாவீதின் வாழ்க்கையிலும் கிட்டத்தட்ட இப்படித்தான் நடந்தது. சோதனையை அனுமதித்த தேவன் இக்கட்டான நேரத்தில் என் வார்த்தை களுக்குச் செவி கொடுக்கிறானா என்று கவனித்தார். வியாதியினிமித்தம் கைவிடப்பட்டு உயிர் போகும் நிலையிலிருந்து ஓர் எகிப்திய அடிமையை அவர்கள் கண் காணும்படி செய்து, சோதனையான இந்நேரத்தில், மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட என் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கிறார்களா என்று உற்றுப்பார்த்தார். உபாகமம் 10:18,19. "அவர் திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் நியாயஞ் செய்கிற வரும், **அந்நியன் மேல் அன்பு வைத்து**

**அவனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார். நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்தபடியால், அந்நியரைச் சிநேகிப்பீர் களாக**" என்கிறது. இங்கே, தேவன் வைத்த தேர்வில் தாவீது நூற்றுக்கு நூறு எடுத்துத் தேர்ச்சி பெற்றுவிட்டார். இப்பொழுது, தேவன் அந்த எகிப்திய அடிமையை தாவீதின் வெற்றிக்கான அஸ்திரமாக மாற்றி விட்டார்.

ஒருவேளை, மோசேயின் பிரமாணங்களின்படி செய்ய மறுத்து, அந்த எகிப்திய **அந்நியனுக்கு ஆகாரம் கொடுக்காமலிருந்திருந்தால்,** கர்த்தரின் உதவி தாவீதுக்கும், அவன் மனிதருக்கும் கண்டிப்பாகக் கிடைத்திருக்காது. அப்படியானால், கர்த்தரின் உதவி ஒரு மனிதனுக்கு எப்பொழுது கிடைக் கிறது? யாருக்கு தேவன் உதவி செய்கிறார்? **அவர் கொடுத்திருக்கும் கட்டளைகளின்படி செய்பவர்களுக்கே.** அதுபோல இன்றைக்கு, தேவன் நம்முடைய வாழ்க்கையிலும் நமக்கு உதவி செய்ய வேண்டுமென்றால், நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி நடக்க வேண்டும். எந்நிலையிலும் நாம் அப்படி நடக்க வேண்டும். இதைச் செய்வதால் மாத்திரம் என் பிரச்சனை தீரவா போகிறது என்று எந்த ஒரு காரியத்தையும் அற்பமாக எண்ணக்கூடாது. ஒருவேளை, அந்த எகிப்திய அடிமையைத் தாவீது அற்பமாக எண்ணி யிருந்தால் என்ன நடந்திருக்கும்? வெற்றியும், இழந்து போனவைகளும் கண்டிப்பாகக் கிடைத்திருக்காது.

எதைக் கொண்டு வேண்டுமானாலும், யாரைக் கொண்டு வேண்டுமா னாலும் உதவி செய்வது தேவனுக்கு லேசான காரியம். நம்முடைய பங்கிற்கு நாம் எந்நிலையிலும் கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்று நடந்து, (2யோவா. 9) கிறிஸ்துவின் சிந்தை பெற்று (பிலி. 2:5) எப்பொழுதும் பிதாவின் சித்தம் நிறைவேற்றுகிறவர்களாயிருக்க வேண்டும். ஏனெனில், "**ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்கிற வனையே நோக்கிப் பார்ப்பேன்**" (ஏசா 66:2-ல்) தேவன் சொல்லியுள்ளார்.

### III. கர்த்தரின் சித்தம் செய்யும் போது வெற்றி உறுதி

"தாவீது எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டான்". என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், சோதனையான நேரத்திலும் கர்த்தருக்காகவும், அவருடைய வார்த்தைகளுக்காகவும் வாழும் போது வெற்றி உறுதி என்பது.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும், இழந்து போனவைகளைத் திரும்பப் பெறுவதற்கும் பலவிதமான யுக்திகள் மனிதர்களாலும், கிறிஸ்தவர் களாலும் கையாளப்படுகிறது. ஆனால், இதற்காக நம்முடைய மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஏனெனில், **தேவன் சுலபமான வழியை இதற்காக நமக்குக் கொடுத்துள்ளார். அது, தேவனிடத்தில் ஆலோசனை கேட்டு, சோதனையான நேரத்தில் உறுதி காட்டி, தேவனுடைய வார்த்தை களின்படி மாத்திரம் செய்யத் தீர்மானிப்பதே.**

தாவீது தன்னுடைய வாழ்க்கையில் இழந்தவைகளைத் திரும்பக் கையாள்வதற்கு மேற்கொண்ட வழிமுறையும் இதுதான். சர்வ ஞானமுள்ள தேவனுடைய ஆலோசனைக்கு ஈடானதும், இணையானதும் ஒன்றுமில்லை.

தேவ ஆலோசனையை நம் வாழ்வில் தள்ளுவது நமக்கு ஒரு போதும் நன்மையாக இருக்காது. மாறாக, அது நமக்கு கேட்டைத் தான் கொண்டு வரும். இவ்வசனத்தைக் கவனியுங்கள். "பரிசேயரும் நியாய சாஸ்திரி களுமோ அவனாலே ஞானஸ் நானம் பெறாமல் **தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்**" (லூக். 7:30).

அப்படியானால், இன்றைக்குத் தேவ ஆலோசனைக்கு நாம் எங்கே போவது? தேவன் நம்மிடத்தில் நேரிடையாகப் பேசுவாரா? என்று நீங்கள் கேட்கலாம். கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நம்மிடத்தில் தேவன் நேரிடை யாகப் பேசுவதில்லை. ஆனாலும், நமக்குத் தேவ ஆலோசனைகள் உண்டு. எப்படி? 2தீமோ. 3:16,17 என்ன சொல்லுகிறது? "வேத வாக்கியங்க ளெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று. ஆகவே தான், வேத வசனங்கள் **தேவனுடைய வார்த்தை** என்றும் (ரோமர் 3:2). **நீதியின் வசனங்கள்** (எபி. 5:13) என்றும் அழைக்கப்படுகிறது. வேதாகமத்திலிருக்கும் ஒவ்வொரு எழுத்தும் தேவ ஆலோசனை தான். வேத வசனங்கள் மூலமாகத் தான் தேவன் இன்றைக்குப் பேசுகிறார். அப்படிப்பட்ட தேவ ஆலோசனை களைத் தேடி வாசித்து, அவைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். மகத்தான தேவனுடைய வசன ஆலோசனைகளோடு நாம் எதையும், கூட்டவோ, குறைக்கவோ கூடாது. இந்த எச்சரிப்பை தேவன், வேதாகமத்தின் ஆரம்ப கட்டத்திலும் கொடுத்துள்ளார் (உபா 4:2). மத்தியிலும் கொடுத் துள்ளார் (நீதி. 30:6). இறுதியிலும் கொடுத்துள்ளார் (வெளி. 22:18). ஆகையால், மிகுந்த கவனமாக இருந்து, சொல்லப்பட்டிருக்கும் தேவனுடைய, கிறிஸ்துவினுடைய உபதேச வார்த்தைகளுக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். தாவீது, தேவனுடைய வார்த்தைகளின்படி நடந்து தான் வெற்றி பெற்றார். எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டார்.

ஆனால், சரீர வாழ்க்கையின் வெற்றிக்காக மாத்திரம் நாம் தேவ ஆலோசனைகளடங்கிய வேத வசனங்களைத் தேடுகிறவர்களாக இருக்கக் கூடாது. ஏனெனில், "**இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் நாம் பரிதவிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்**" (1கொரி 15:19). ஆகவே, மறுமையின் வாழ்க்கைக்காக நாம் வேத வசனங்களுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

இம்மையின் வாழ்க்கையில் நாம் பெறும் வெற்றி அற்ப காலத்திற்கு தான். ஆனால், மறுமைக்கான வாழ்க்கையின் வெற்றி நித்திய காலத்திற்கு மானது. ஆகையால், கிறிஸ்துவின் உபதேசப்படியாக நாம் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட்டு (அப். 16:30). கிறிஸ்துவாலே அவருடைய சபையிலே சேர்க்கப்பட்டு (அப். 2:47). மரணபரியந்தம் உண்மையாயிருந்து (வெளி. 2:10) நித்திய வெற்றியைப் பெறும்படியாய் உங்களைக் "கிருபையுள்ள வசனத்துக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" (அப். 20:32). தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

**காலம்** : **3 வருடம்** (ட்ரைமஸ்டர் முறை)

**Duration** : **3 Years (Trimester System)**

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S. (Bachelor of Biblical Studies)**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## இயக்குநர்

எக்லீசியா வேதாகமக் கல்லூரி
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா
✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# வேதாகமம், தேவ ஆவியினால் அருளப்பட்டது

வேதாகமம் தேவனுடைய வார்த்தை, தேவனுடைய மனுஷர்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள். இந்த உண்மையை எத்தனையோ பேர் மறுத்திருக்கிறார்கள். இன்றும் ஏற்றுக் கொள்ள தயங்குகின்றனர். சிலர் வேதாகமத்தில் சொல்லப்பட்ட அற்புதங்கள் முடியாத காரியம் என்கின்றனர். இன்னும் சிலர் அற்புதங்கள் வெறும் இயற்கையின் விளையாட்டு என்பர். மற்றும் சிலர் வேதாகம ஆசிரியர்கள், சேக்ஸ்பியர் அல்லது ஒரு பாடலாசிரியரைப் போன்றவர்கள், எண்ணங்கள் மாத்திரம் தேவாவியினால் அருளப்பட்டிருக்கலாம், ஆனால் வேதாகமத்து ஆசிரியர்கள் அவர்கள் சொந்த வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள் என்று கூறுவர். இன்னும் சிலர், வேதாகமம் தேவனிடத்திலிருந்து வரவில்லை என்று சாதிப்பர்.

**வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டதாக கூறுகிறது.**

இந்த உண்மையை வேதாகமமே நிரூபிக்கிறது. தாவீது கூறுகிறார்; "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்". (2சாமுவேல் 23:2). அப்போஸ்தலனாகிய பேதுரு கூறி இருக்கிறார்; "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்" (2பேதுரு 1:21). "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்றார் பவுல் (2தீமோ. 3:16).

அப்படி என்றால், தேவன் தம்முடைய சித்தத்தை நமக்கு, இந்த வேதாகம ஆசிரியர்கள் மூலமாக வெளிப்படுத்தினார். அவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை எழுதவில்லை. தேவன் தன் வார்த்தைகளையே எழுதி இருக்கிறார்கள் என்று பொருள்.

ஆனால் வேதாகமத்தை மறுப்பவர்கள் என்ன கூறுவர், வேதாகமம் தனக்குத்தானே சுயசாட்சி கூறினால் மட்டும் போதாது, வேதாகமத்துக்கு வெளியே சாட்சியங்கள் வேண்டும், அப்பொழுதுதான் இதை உண்மை என்று ஒப்புக் கொள்ள முடியும் என்பர். ஆனால் வேறு எத்தனையோ விவகாரத்திலும் சுய சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

உதாரணமாக, ஒரு குடியானவன் தான் விளைவித்த கோதுமையின் தரத்தை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. வழக்கு மன்றங்களிலும் பிரதிவாதி தனக்குத் தானே சாட்சியாக இருக்க முடியும். அவன் பொய்யன் என்று நிரூபிக்கப்பட்டாலொழிய அவன் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. மிட்டாய் என்பதற்கு உண்மையான நிரூபணம் அதை சாப்பிடு வதில் உள்ளது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஆச்சரியப்படத்தக்க ஐக்கியத்

தையும், தீர்க்கதரிசனங்களும் அவற்றின் நிறைவேறுதலையும், காலத்தினால் அழிக்கப்பட முடியாத தன்மையையும் பார்க்கும் பொழுது வேதாகமம் உண்மை என்றே நம்ப வேண்டி இருக்கிறது.

வேதாமத்திலுள்ள பொதுவான அம்சங்கள், தலைப்புகள் மாத்திரம் தேவ ஆவியினால் அருளப்பட்டது என்ற கூற்றுக்கு மாறாக, வேத வாக்கியங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய முறையே தேவனால் அருளப் பட்டிருக்கிறது. மறுபடியும் வேதாகமமே இதற்கு பதில் கூறட்டும். எகிப்து நாட்டின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை அழைத்துவர மோசே தேவனால் அழைக்கப்பட்டபோது அவன் கூறியது, "நான் வாக்குவல்லவன் அல்ல. நான் திக்கு வாயும், மந்த நாவும் உள்ளவன்" என்றான் (யாத் 4:10) அதற்குக் கர்த்தர், "நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்" என்றார் (12-ம் வசனம்).

இதே வாக்குறுதி அப்போஸ்தலர்களுக்கு இயேசுவினால் அளிக்கப் பட்டது. "அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும் போது எப்படிப்பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள். நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசு கிறவர்" என்றார் இயேசு. (மத்தேயு 10:19,20). தேவன் என்ன கூறினார் என்பதை மோசே வெளிப்படுத்துகிறபோது; "கர்த்தர் கூறியதாவது, இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது" என்றார் (உபாகமம் 6:6). அப்போஸ்தலர்கள் நிமித்தமாக கிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறபோது, "நீர் எனக்கு கொடுத்த வார்த்தைகளை, நான் அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டார்கள்" என்றார் (யோவான் 17:8).

உண்மையிலே தேவன் தம் வார்த்தைகளை அவர்கள் மனதில் ஊதி, அவர்கள் உபயோகித்த நாவையும், எழுதுகோலையும் கட்டுப்படுத்தி இருக்கிறார். தேவன் ஏசாயாவுக்கு கூறும் போது, "நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி" என்றார் (ஏசாயா 51:16). தாவீதும், "கர்த்தருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" என்றார் (2சாமு. 23:2). கிறிஸ்துவும் அவருடைய வார்த்தைகளை உலகத்துக்கு கொடுக்க இருப்பவர்களுக்கு கூறிய உறுதிமொழி, "நான் வாக்கையும், ஞானத்தையும் உங்களுக்கு கொடுப்பேன்" என்றார் (லூக்கா 21:15). இந்த வாக்கையும், ஞானத்தையும் பெற்ற பவுல் அப்போஸ்தலன் கூறியது, "அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி" என்றார் (1கொரிந்தியர் 2:13).

வேதாகமம் மாத்திரமல்ல, வேதாகம ஆசிரியர்களும் அவ்வாறே எண்ணத்தினாலும், வார்த்தையினாலும் தேவாவியினால் வழி நடத்தப் பட்டதாக கூறுகின்றனர். எசேக்கியேல் தீர்க்கதரிசி "எங்கே, எப்பொழுது,

எந்த சந்தர்ப்பத்திலே, கர்த்தருடைய வார்த்தை உண்டாகி" என்று கூறுகிறார் (எசேக். 1:1-3). ஆமோஸ் வார்த்தைகளை தரிசனங்கண்டதாகக் கூறுகிறார் (ஆமோஸ் 1:1). மீகாவும், கர்த்தருடைய வார்த்தையை தரிசித்ததாகக் கூறுகிறார். (மீகா. 1:1). பவுல் அப்போஸ்தலன், தன் பேச்சும், பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நய வசனம் உள்ளதாக இருக்கவில்லை என்றார் (1கொரி. 2:5). பின்னும் தான் போதித்த காரியங்கள் இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட காரியங்கள் என்றார். (கலா. 1:12). சீமோன் பேதுரு, "நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே" என்றார் (அப். 4:20). சாத்தான் தான், யோபுவைக் குறி வைத்து தாக்கிக் கொண்டிருந்தான் என வேதம் சொல்லுகிறது. அவனை அழிப்பதற்காக சூறாவளிக் காற்று, பெரும் தீ விபத்து போன்ற பலவிதமான இயற்கைச் சீற்றங்களை உண்டாக்கி சதி செய்தான்! (யோபு 1:16,19). பின்னும் அவர் எச்சரிப்பதாவது ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கக்கடவன் (1பேதுரு 4:11).

ஆகையால், வேதாகம ஆசிரியர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட வார்த்தைகளையே நமக்கும் எழுதி வைத்து இருக்கிறார்கள். நாம் வேதாகமத்தை பிரசங்கிக்கும் வேளையில், நாம் கர்த்தருடைய வார்த்தைகளையே பிரசங்கிக்கிறோம். நாம் வேத வசனங்களை கூறும் பொழுது, நம்முடைய வார்த்தைகள் தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. நாம் அல்ல.

**ஆதி கிறிஸ்தவர்களைப் பற்றியும், வேதாகமத்தைப் பற்றியும் சில உண்மைகளை இப்போது ஆராய்வோம்.**

ஆதி கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை காணவில்லை என்றும், கிறிஸ்து மரித்து சுமார் 60 வருடங்களுக்கு மேல், புதிய ஏற்பாடு உருவாக்கப்படும் கட்டத்தில் இருந்தது. புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படுவதற்கு முன்பே எத்தனையோ ஆயிரக்கணக்கான பேர் தங்கள் விசுவாசத்திற்காக தியாகிகளாக மரித்திருக்கின்றனர். ஆகவே அந்த காலத்தில் கத்தோலிக்க சபையினிடம் மாத்திரமே சத்தியம் இருந்தது என்று எப்படி கூற முடியும்?

**முதலாவது,** அந்த காலத்தில் ரோம கத்தோலிக்க சபை இருக்கவில்லை. அது நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு பின்னரே தோன்றியது. அதுவும் சத்தியத்தை விட்டு வழி விலகிச் சென்றதன் விளைவாக (2தெச. 2:1 - 11; 1 தீமோ. 4:1-4) தோன்றியது.

**இரண்டாவது,** வேதாகமம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட மனுஷர்களால் எழுதப்பட்டது (2பேதுரு 1:21; 1கொரி. 2:13). வேதாகமம் எழுதப்படுங்காலத்தில் வேதாகமத்தை எழுதிய ஆசிரியர்கள் தேவாவியினால் ஏவப்பட்டிருந்தார்கள். வேதாகமம் எழுதி முடித்த பின்பு, வேதாகமம் தேவாவியினால் அருளப்பட்டிருந்தது. மனிதர்கள் அல்ல.

இன்னும் வேதாகமத்தில் எல்லாம் வெளிப்படுத்தப்படவில்லை, இது போதுமானது அல்ல என்று சாதிப்பர் சிலர். 2 தீமோ 3:16-17, வசனங்களை வாசித்தாலே, வேதாகமம் போதுமானது என்று அறியலாம். "வேத வாக்கியங்களெல்லாம், தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமாயிருக்கிறது". யோவான் 21:25-ல் "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாது" என்று வாசிக்கிறோம்.

ஆனால் இவைகள் ஏன் எழுதப்பட்டது என்பதற்குரிய காரணத்தை யோவான் அறிவிக்கிறார். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்றார் (யோவான் 20:31). **கடைசியாக வேதம் கூறுவதைக் கவனிப்போம்.**

1. கிறிஸ்து உலகத்திலிருந்த போது, அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் மூலம் எல்லா சத்தியங்களையும் அளிப்பதாக வாக்குத்தத்தம் பண்ணி இருந்தார் (யோவான் 14:26; 16:13). 2. அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டிலே இந்த சத்தியங்களை பெற்றுக்கொண்டனர் (அப்போஸ்தலர் 20:20-27; 2 பேதுரு 1:3; யூதா 1:3; எபேசி. 3:3-5). 3. எல்லா வேத வாக்கியங்களும் முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டன. 4. வேத வசனங்களே விசுவாசப்பிரமாணங்கள் (ரோமர் 12:6). 5. அவைகள் கர்த்தருடைய கற்பனைகள். (1கொரிந்தியர் 14:37). 6. அந்த வேத வசனங்களைக் கொண்டே ஒவ்வொருவனும் நியாயந்தீர்க்கப்படப் போகிறான். (யோவான் 12:48).

அந்த வேத வசனங்கள் நம்மை தேவனுக்கு முன்பாக தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் செய்யும் (2 தீமோ, 3:16,17).

**J.C. Choate** **J.C. சோட்**

**தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.**

**(2பேதுரு 1:21)**

பெண்கள் பகுதி

# நம்முடைய பிள்ளைகளுக்கு முன்னுரிமைகளை கற்றுத்தருதல்

அற்புத படைப்பான தொலைக்காட்சியின் மூலம், நாம் நம் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளும் அறையிலிருந்தபடியே, பூமியின் பெருந் தொலைவு முனைக்கு பயணம் செய்யும் வாய்ப்பை, இப்போது பெற்றுள்ளோம்.

நான் அப்பேற்பட்ட ஒரு பயணத்தை சமீபத்தில் மேற்கொண்டேன். பாதுகாப்பற்ற அந்த பயணத்தை, நீதிக் கதைகளுக்குச் சொந்த பூமியாகிய "லடாக்" என்ற இடத்துக்கு மேற்கொண்டேன். அங்கே பல நூற்றாண்டு களாகியும், இன்னும் மாறாத பழக்கங்கள் வழக்கத்திலிருப்பதை கண்டேன்.

அந்த மழைவாழ் மக்கள், தாங்கொண்ணா துன்பத்தையும், எதையோ இழந்த நிலையோடு இந்த இருபதாம் நூற்றாண்டில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து பார்ப்பதற்கு எவ்வளவு விசித்திரமான இடம்! என்ன ஆச்சரியமான இடம்! என்று எந்தவொரு பார்வையாளரும் நினைப்பார்கள். இந்த இடத்தை வந்து பார்வையிடுவ தென்பது, கடிகாரத்தை தலை கீழாக ஓடச் செய்வது போன்றது. கட்டாயமாக வெளியே உள்ள மக்கள் இங்கு வந்து, இந்த அமைதியான கலாச்சாரம் கொண்ட மக்களை, மற்ற இருபதாம் நூற்றாண்டின் நாகரீகம் கொண்ட வாழ்க்கையைப் பால மாற்றமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், இங்கே மனிதர்கள் எந்தவொரு வசதியும், மருத்துவரும், மருந்துகளும், தங்களுடைய அன்றாட கடினமான வேலையை சுலபமாக்கித் தர எந்தவொரு இயந்திரமும் இன்றி வாழ்ந்தும், செத்தும் கொண்டிருக்கிறார் கள். இதிலும் கொடுமை என்னவென்றால், தேவனுடைய சுவிசேஷம் இங்கு சென்றடையாதிருத்தல் இன்னும் துக்கமான விஷயமாகும்.

பெரும்பாலும், சீனாவில் வசிக்கும் மக்கள் புத்தமதத்தை சார்ந்தவர் களாகவே உள்ளனர். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலான நேரம் புத்தமத சடங்குகள் சம்பந்தமாகவே சுழன்று கொண்டுள்ளது.

பொதுவாக வழக்கத்தில் இல்லாத ஒரு பழக்கம் இங்கே காணப்படு கிறது. குடும்பத்தில் உள்ள தலைச்சன் மகன், அல்லது பிரியமான மகன் அவனுடைய சிறுவயதிலிருந்தே, பல சமயங்களில் பிறந்ததில் இருந்து கூட, புத்த மதத் துறவி ஆவதற்காக பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றனர். இந்த குழந்தைகள் தாய்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தேர்ந்தெடுக்கும் உரிமையோடு வளர்க்கப்படுகின்றனர். சிறுபையன்களாக இருக்கும் போதே அவர்கள் துறவி மடத்திற்குச் சென்று அங்குள்ள துறவிகளுடன் சேர்ந்து பயிலுகின்றனர்.

எப்படி இந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறார்கள், அவர்களும் தங்கள் பெற்றோரின் தீர்மானத்திற்கு செவி சாய்க்கிறார்கள்? என்பது நமக்கு கேள்வியாக இருக்கிறது.

எப்படியாவது ஒரு துறவியாக வரவேண்டும் என்ற ஒரு மனகிளர்ச்சியும், மனதார உய்த்து உணர்ந்து செயல்பட்டதே இதற்கு காரணம் என்பது தான் இதற்கான சரியான பதில் ஆகும். இந்த பதவி இரண்டு விசேஷ நபர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. முதற் பிறந்த மகன், அதிலும் விசேஷமாக மிகவும் நேசிக்கப்பட்ட மகன்! ஒரு குழந்தையானது, சிறுவயதிலிருந்தே தனக்கென்று சிறந்த ஒரு பொறுப்பு உண்டு என்பதை அறிந்து, தன், வாழ்க்கையை அர்ப்பணித்தும், பணியையும் உணர்ந்து வளருமாறு கற்பிக்கப்படும் பொழுது, தான் இவ்வாறு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக வளர்க்கப்படுவதை உணர்ந்து அதைப்பற்றிய பெருமையும் படுகிறது. தன்னுடைய பெற்றோர்கள் தன்னை மற்ற குழந்தைகளை விட சற்று அதிக அளவில் மதிக்கிறார்கள் என்ற முழு நம்பிக்கையும் அதன் இருதயத்தில் ஏற்படுகிறது. அவன் கடவுளுக்காக தன் குடும்பத்தின் சார்பில் சேவை செய்வதால், அவன் "**விசேஷித்தவன்**" என்ற பெயரைப் பெறுகிறான்.

இந்த விதமான கலாச்சாரமானது, லடாக்கில் எத்தனை குடும்பங்கள் உள்ளதோ அத்தனை புத்த துறவிகள் உள்ளனர் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

அதற்கு நேர்மாறாக, இன்றைக்கு உலகிற்கு ஆசீர்வாதமாக இருக்கும் வகையில் ஊழியர்கள் என்ற முறையில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே உள்ளனர். கிறிஸ்தவக் குடும்பங்கள் உள்ளனர். இதைப் பார்க்கும் போது, மிக அருமையான ஒரு கேள்வி எழும்புகிறது. ஏன்? கிறிஸ்தவக் குடும்பங்களில் ஆவிக்குரிய சேவை செய்யவும், போதிக்கவும், கிறிஸ்துவின் உண்மையான ஊழியனாக இருந்து செயல்படவும் ஏன் மிகக் குறைந்த இளைஞர்களே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்?

இதற்கு பதில் என்னவென்று பார்த்தால், இந்த மாதிரியான அர்ப்பணிப்பு பற்றி பெற்றோர்களும், சபையும் செயல்படும் விதமே காரணமாகும். நம் பிள்ளைகள் சிறுவயதாயிருக்கும் போதே "**வெற்றியுள்ளவனாக**" வரவேண்டும் என எதிர்பார்த்து, அவர்களுக்கு அதை போதித்திருக்கிறோமோ? வெற்றியுள்ளவன் என்கிறபொழுது, "**அதிகமாக சம்பாதித்தால், நீ மிகவும் பாக்கியசாலி**" என்று சொல்லியிருக்கிறோமா? அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி பேசும் போது நீ ஒரு மருத்துவராக, வக்கீலாக, வங்கிக் கணக்கராக, ஆசிரியராக வரவேண்டும் என்று கூறிவிட்டு, ஒரு போதகராக வரவேண்டும் என்பதைச் சொல்லாமலே விட்டு விடுவதுடன், அதைப்பற்றி குறைத்து மதிப்பிட்டும் பேசியுள்ளோமா? முழு நேர ஊழியர்களை ஏதோ அவர்கள் மூன்றாந்தர கிறிஸ்தவர்கள் என்றும், கூலிக்காக வேலை செய்கிறவர்கள் என்றும் மதிப்பே இல்லாத ஒரு வேலை செய்கிறார்கள் என்றும் கூறியுள்ளோமா?.

ஒருவேளை நம்முடைய பிள்ளையோ, பையனோ ஒரு ஊழியனை திருமணம் செய்கிறார்கலென்றாள், அதை நாம் தடை செய்கிறோமா? அவர்கள் பெரியவர்களாகி, வெளி நாடுகளுக்குச் சென்று, மிஷனரிப் பணி செய்ய கனவு கண்டு கொண்டிருப்பார்களானால், நாம் அதற்கு எதிராக செயல்படுகிறோமா?.

முதலாவதாக, அவர்கள் உலகக் கல்விகளிலே சிறந்து விளங்க வேண்டு மென்று வலியுறுத்துகிறோம்? ஒருவேளை, அவர்கள் கணிதம், வியாபாரம், இசை, கலை, விளையாட்டு போன்ற காரியங்களில் சிறு வயதிலிருந்தே அவன் திறமை கொண்டவனாயிருந்தால், அதையே தொடர்ந்து செய் என்று கூறுகிறோமா? ஊழியம் செய்வதில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லை என்று அவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறோமா?.

இன்றைக்கு நம்மில் வெகு சில பிள்ளைகளே ஊழியர்களாக வருவதற்கு காரணம், நாம் இதன் சிறப்பினை அவர்களுக்கு எடுத்துக் காட்டாததேயாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வீட்டில் ஒரு ஊழியக்கார னாக ஒருவன் வேலை செய்ய வேண்டும் என்று நம்புவதைக் காட்டிலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்த மதத்திலேயும், புத்த சிஷ்யனாக வேலை செய்வதிலும் கௌரவமும், அதிக நம்பிக்கையும் கொண்டுள்ளனரா?

நம்முடைய எண்ணத்திலே பின் என்னதான் தவறு செய்து கொண்டுள்ளோம்? நம்முடைய வலியுறுத்தலில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய முன்னுரிமைகளில் என்ன தவறு செய்து கொண்டிருக்கிறோம்?

பழைய ஏற்பாட்டு கட்டளையில் கூட தேவன் சொல்லும் போது, "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனதிலும், மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது" என்றார் (யாத். 13:2).

அதைவிட சிறந்த உடன்படிக்கையான புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்து வரும் நம்மிடம் அவர் குறைந்ததையா எதிர்பார்ப்பார்?.

இந்தக் கட்டுரை வாசிக்கும் என் அன்பிற்குறிய தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமையை கற்றுக் கொடுத்தலில் நம்முடைய பங்கு எவ்வாறு உள்ளது? இந்தக் கட்டுரை நம்முடைய மனதிற்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தும் என்றே நம்புகிறேன். நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய "**உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்**" என்றதில் நாம் எந்த அளவு நம்மை ஈடுபடுத்தியுள்ளோம். இன்றைக்கு நாகரீக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்கள், தங்கள் மகள் கம்ப்யூட்டர், விஞ்ஞானம் இவைகளில் சிறந்து வெளிநாடு சென்று அதிக பணம் சம்பாதித்து பேரோடும், புகழோடும் வாழவேண்டுமென்று அதற்கு தங்கள் நேரம், பணம், உழைப்பு எல்லாவற்றையும் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த **"லடாக்கில்"** உள்ள நிலையை பார்க்கும்போது உண்மையாகவே அது நமக்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. வீட்டுக்கு ஒரு புத்த துறவி! துறவி!! என்ன ஆச்சர்யம்! நம்முடைய குடும்பத்தில் உள்ள ஆண்மக்களை ஊழியனாக வருவதற்கு நாம் சிந்தித்திருக்கிறோமா? அதற்காக முயற்சி எடுத்திருக்கிறோமா? ஜெபிக்கிறோமா? நாமும் அதற்காக முன் வருவதில்லை. அப்படியே முன் வந்து தங்களை ஒப்புக் கொடுத்து ஊழியம் செய்பவர்களையும் சும்மா விடுவதில்லை.

அருமையானவர்களே, இந்த உலகின் காரியங்கள் அனைத்தும் இந்த உலகோடு முடிந்து போகக் கூடியவைகள். நம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய முறையில் தேர்ச்சி பெற அவர்களுக்கு வசனம், ஜெபம் இவைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும்போது, **"நீயும் நல்ல போர்ச்சேவகனாய் தீங்கனுபவி"** என்கிறார். நாமும் நம்முடைய பிள்ளைகள் தேவனுக்காக பாடுபடுவதற்கு, பழக்கப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கர்த்தருடைய பணி செய்ய முழுமனதோடு அர்ப்பணிக்க வேண்டும். இதை வாசிக்கும் தாய்மார்களே சிந்திப்பீர்களா? சிந்தித்து செயல்பட தேவன் உதவி செய்வாராக! ஆமென்!

**பெட்டிசோட்** **ரேச்சல் ராஜநாயகம்**

## உங்கள் சிந்தனைக்கு

- **உண்மையைக் குறித்து ஊராருக்கு நீ பேசுவது அல்ல, உன் உண்மை பற்றி ஊரார் பேசுவதே ஆன்மீக வெற்றி.**
- **நற்குணம் இல்லாதவனைவிட இல்லாத குணத்தை இருப்பது போல் காண்பிப்பவன் பெரிய பாவி.**
- **நல்லதைப் பற்றி பேசுகிறவர்களெல்லாம் நல்லதைச் செய்திருந்தால் உலகில் இன்று இத்தனை தீயவர்கள் இருக்கமாட்டார்கள்.**
- **மனிதர்களுக்கு முன்னால் உன் பலம் விளங்க வேண்டுமானால் இறைவனுக்கு முன்னால் உன் பலவீனங்களை உணர்ந்து கொள்.**
- **பாடுகளின் பாதையில் நாம் கற்கும் பாடங்களே பிறர் வெற்றி பெற நாம் கொடுக்கும் ஆயுதங்கள்.**

வாலிபர் பகுதி

# வாலிபரின் "ஐக்கியம்"

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு வாலிப சகோதர சகோதரிகளே! இருளின் பிடியினின்று விடுவிக்கப்பட்டு ஒளியின் ஐக்கியத்தில் கிறிஸ்துவோடும், பிதாவாகிய தேவனோடும் இணைக்கப்பட்டு தேவ சேனைக்குள் யுத்த வீரர்களாய் தெரிந்தெடுக்கப்பட்ட ஜெப வீரர்களே உங்களுக்கு உயிர்த்தெழுந்து சாத்தானை ஜெயித்த மகத்துவமுள்ள இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறிக்கொள்ளுகிறேன். இந்த மாதம் திருமறை ஆசான் இதழின் வழியாய் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

ஐக்கியம் என்ற வார்த்தை "ஒற்றுமை" என்றும் ஒன்றோடு ஒன்று "இணைக்கப்பட்டு" என்றும் பொருள் கொள்ளலாம். ஐக்கியம் என்பது எல்லாதரப்பிலும் இருக்கிறது, ஐக்கியம் என்ற வார்த்தை சங்கம் (சங்கமம்) என்றும் அதையே ஆவிக்குரிய வகையில் "சபை" (சர்வசங்கமாகிய சபை) என்றும் அழைக்கப்படும். ஆக கிறிஸ்துவின் சபை என்பது கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டவர்களின் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியம் என்று பொருள். பிரியமான சகோதரர்களே நம்முடைய ஐக்கியம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

## I <u>இருளின் ஐக்கியம் :</u>

ஒளியின் ஐக்கியம் ஒரு போதும் இருளோடு இருப்பது இல்லை. இருளின் ஐக்கியமும் ஒருபோதும் ஒளியோடு இருப்பதில்லை.... இருளின் ஐக்கியம் அது தனி சாம்ராஜ்யம், அது எப்போதும் மாம்சத்தை மகிழ்விக்கின்ற சாம்ராஜ்யம், நம்முடைய மாம்சமும் மனசும் விரும்பினதை செய்ய வைக்கும் ராஜ்யம், பாவத்துக்கு நம்மை அடிமையாக்கும் சாம்ராஜ்யம். இஷ்டம் போல் நடந்து இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ள வழிசெய்யும் சாம்ராஜ்யம். இன்மையின் நன்மைகளை பெற்று அனுபவிக்கும் இன்மைக்குரிய ராஜ்யம். "இருள்" என்றாலே மனுஷனுக்குள் வருகின்ற முதல் உணர்வு பயம்! ஆனால் இருளுக்குள் இருளாய் வாழ்ந்து கொண்டிருப்பவன் பயத்தை மறந்து இருளின் கிரியை செய்ய சரியான சமயம் இருள் சூழ்ந்த நிலை தான் என்று கருதுகிறான்.

மனிதர்கள் அனைவரும் பாவம் செய்து இருளுக்குள் ஐக்கிய மானார்கள். இருள் அவர்களை அடிமைகளாக்கிக் கொண்டது. அந்த இருள்

மூன்று வகையிலே செயல்பட வைக்கிறது. (1) கண்களின் இச்சை (2) மாம்சத்தின் இச்சை (3) ஜீவனத்தின் பெருமை ஆகிய வடிவங்களில் மனுஷனுக்குள் கலந்து விடுகிறது. மேலும் வெளிப்படையாக சொல்லுவோமானால் தேவனுடைய அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள உயிரினங்களோடு ஒப்பிட்டு விக்கிரகாராதனை செய்வது, விபச்சாரம், வேசித்தனம், காமவிகாரம், பொருளாசை, கொலை வெறி, வஞ்சகம், அநியாயம், பில்லிசூனியம், களியாட்டு ரோமர் 1:28,29; 1 கொரி 6:9,10; கலா 5:19,20 போன்ற இருளின் கிரியைகளைச் செய்து பிசாசை பிரியப்படுத்தி வாழும் மக்கள் உண்டு. இன்றைய கிறிஸ்தவ இளைஞர்கள் அநேகர் இவைகளில் சிக்குண்டு கிறிஸ்துவின் நாமத்தை தூஷித்துக் கொண்டிருக்கின்றனர். ஆம், பிரியமானவர்களே, சகோதரனை சகோதரன் பகைப்பது இருளின் ஐக்கியத்துக்குள்ளான செய்கை சகோதரருக்குள்ளாக பிரிவினைகளை ஏற்படுத்துவது இருளின் ஐக்கியத்தின் வெளிப்பாடு 1 யோவா 2:9,10. இன்றைக்கு அநேக வாலிபருடைய ஐக்கியம் மதுபானத் தோடும், மதுபான வெறியரோடுமிருக்கிறது ஏசா 5:11. அதனால் வழி தப்பி, நெறிமாறி நடந்து தேவனுடைய கோபத்தை சம்பாதிக்கின்றனர். மதுபானத்தையும், திராட்ச ரசத்தையும் ஆசையாய் தேடுகிற வாலிபர்களே கவனியுங்கள். பாத்திரத்திலே (பாட்டில்) பளபளப்பாய் தோன்றுகிறதை நோக்குகிறாயே அதினால் வரும் பலனை அறியாயோ, அதினால் வருவ தெல்லாம் வேதனை, துக்கம், சண்டை, புலம்பல் காயங்கள் இரத்தங் கலங்கின கண்கள் இருளின் ஐக்கியத்தின் விளைவைக் கண்டாயா. இதுமட்டுமா..... சபிக்கப்பட்ட ஜனங்களோடு இணைக்கப்படுவாயே பிசாசிற்கும் அவனுடைய தூதர்களுக்கும் வரும் பலனை நீயும் பற்றிக் கொள்ள வேண்டிய தாகுமே என்பதை யோசித்துப்பார்......

நீதி 23:35-39 இப்படி வேதனையுண்டாக்கும் வழிகளிலே காரியங்களிலே தங்களை இணைத்துக் கொண்டு ஐக்கியமாகி வாழ்கிறவர்கள் அனைவரும் இருளுக்குள் இருக்கிறார்கள். வாலிபர்களே, மனந்திரும்புங்கள். தூங்குகிறவர்களைப் போல் இராமல், வெறியர் களாயிராமல், விசுவாசமுள்ளவர்களாயும், தெளிந்த புத்தி, அன்பும் உள்ளவர்களாயும் கிறிஸ்துவின் மெய்யான ஒளியை தேடி அதில் ஐக்கிய மாவோம்.

அன்பு சகோதரனே, இருளிலே நீ மறைந்திருக்கலாம் ஆனால், கிரியைகள் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாய் தெரிகிறது. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு பாவத்தையும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். இதுவெல்லாம் ஆண்டவருக்கு தெரியப் போகிறதா! என்று தப்பு கணக்குப் போட்டுக்கொண்டு உன் பாவங்களில் தொடராதே பிர 12:13,14-ல் அவனவனுடைய கிரியைக்குத்தக்க பலன் என்னோடே கூட வருகிறது என்ற ஆண்டவர் சொன்னார். அப்படியே

செய்வார் வெளி 22:12. உன் இருளின் கிரியைகள் உன்னை பின்தொடர்ந்து நீ அமுக்கப்பட்டு விடாதே. ஆகவே, இப்பொழுதே ஒளியை அறிந்து கொள்ள உன் இருதயத்தை பிரயோகம் செய். இப்பொழுதே மனந்திரும்பு, இயேசுவை அறிக்கை செய். இருளின் ஐக்கியத்தினின்று உன்னை விடுவித்துக்கொள். அப்பொழுது அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த புறம்பான இருளிலிருந்து நீ தப்புவிக்கப்படுவாய்.

**II ஒளியின் ஐக்கியம் :-**

ஒளி (வெளிச்சம்) என்றாலே மனுஷனில் வருகிற முதல் உணர்வு சந்தோஷம் (மகிழ்ச்சி) மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது. இருளிலே இருந்த ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்தனர் மத். 4:15 - ஒளியானது இருளை அப்புறப்படுத்தி அங்கே வெளிச்சத்தை நிரப்புகிறபடியால் அவன் வெளிச்சத்தால் மனுஷன் நிரப்பப்படுகிறபடியால் அவன் சந்தோஷப்படுகிறான். கிறிஸ்தவர்களாகிய நமக்கு மெய்யான ஒளி வந்திருந்தும் நம்முடைய கிரியைகள் பொல்லாததாய் காணப்பட்டால் ஒளியை பகைக்கிறவர்களாய் காணப்படுவோம். இருளை அதிகமாய் நேசிக்கிறவர்களாயிருப்போம். அன்பான வாலிப சகோதரர்களே, சகோதரிகளே உனக்குள் ஒளியிருக்கிறதா? நீ ஒளியின் ஐக்கியத்தில் இருக்கிறாயா? அப்படியானால் உன் கிரியைகள் வெளியரங்கமானதாயும் நீதி நிறைந்ததாயும் காணப்படும் யோவா 3:19-21. அந்தரங்கத்திலே கிரியைகளை நடப்பிப்பாயானால் நீ அந்தகாரத்திலே நடக்கிறவனா யிருப்பாய். இயேசு ஆண்டவர் சொன்னார் நான் உலகத்திற்கு ஒளியா யிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் யோவ 8:12 என்றும் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் தொடர்ந்தால் தான் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் (ஒளியின் ஐக்கியத்தில்) இருக்கிறோம் என்று பொருள். இயேசு உலகின் ஒளியாயிருக்கிறார் என்றால் அந்த ஒளி கற்பிக்கின்ற வழியில் நடக்க வேண்டும். அந்தகாரக் கிரியைகளை நமக்கு இயேசு கற்றுக்கொடுக்கவில்லை. அவைகள் பிசாசினுடையது ஒளியாகிய இயேசுவிடமுள்ளது "சத்தியம்" மட்டுமே. ஆகவே சத்தியத்தை கேட்டு அவைகளின்படியே செய்வோ மானால் அவைகளால் பிழைப்போம். அந்த மெய்யான நீதி, பரிசுத்தம், தேவசாயல் எபே 4:18-24 - அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார் எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது என்று அதுதான் நிறைவான சந்தோஷம் என்றும் சொல்லி நமக்கும் அறிவுறுத்துகிறார். தேவன் ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அப்படியானால் அன்பு சகோதரர் களே அவருடைய பிள்ளைகளாயிருக்கின்ற நாம் ஒளிக்குள் ஐக்கியப் பட்டவர்கள் என்றே பொருள். ஒளியிலே இருக்கிறோம் என்றால் சத்தியத் தின்படி நடக்க வேண்டும் சத்தியத்தின்படி செய்யும்போது ஒளியை

நாம் பிரதிபலிக்கிறோம். ஒளியிலே நடந்தால் தான் ஒளியிலே ஐக்கியப் பட்டிருக்கிறோம் என்று பொருள். ஒளியின் கிரியைகளை நடப்பிக்க வேண்டு மானால் தொடர்ந்து ஒளிக்குள் நிலைத்திருக்க வேண்டும். ஒளியின் பிள்ளை களாகிய நாம் உலகத்தோடு ஐக்கியப்படாமல் அந்நிய நுகத்தில் பிணைக்கப் படாமல் பேலியாளின் கிரியைகளைச் செய்யாமல் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

ஒளியின் ஐக்கியத்தினால் நம்மில் உருவாகும் கனிகள் ஆவியின் கனிகள் ஒன்பதும் விளையும். சகல நற்குணத்திலும் ஆவியின் கனி வெளிப்படும். இவைகள் அனைத்தும் ஒளியின் ஐக்கியத்தினால் வரும் தேவ மகிமைக்கேற்ற கனிகளே. அதே போல ஒளியின் ஐக்கியத்தில் வாழ்கின்ற நமக்கு தேவனிடத்திலிருந்து வரும் பலன்களும் உண்டு. ஆம், பிரியமான வர்களே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் நமக்குண்டு; ஆகவே ஒளியின் ஐக்கியத்தின் மக்களாகிய நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே. மேலும் வாடாத ஜீவக்கிரீடத்தைப் பெற்றுக் கொண்டு என்றென்றைக்கும் பரலோகத்தில் வீற்றிருக்கப் போகிறோம். ஆகவே ஜீவனையும் அழியாமை யையும் சுதந்தரிக்கப் போகிறவர்களாகிய நாம் அனைவரும் பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகி. நன்மை செய்து கிறிஸ்துவுக்குள் எப்போதும் சந்தோஷமாயிருந்து இடைவிடாமல் ஜெபித்து தேவனை நம்பிக் கொண்டிருப்போமானால் கிறிஸ்து இயேசுவுக்குள் கனி கொடுத்து வாழ்வோமானல் அவருக்கு சீஷராயிருப்போம். அப்பொழுது நாம் வேண்டிக்கொள்வது எதுவோ அது நமக்குக் கிடைக்கும் என்கிறார். பிரியமான சகோதரனே எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று இயேசுவின் வருகையின் காலமும் நெருங்கிற்று. ஆகவே, நாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து கிறிஸ்துவின் ஒளிக்குள் வாழ்வோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

***K. சேகர்,*** திருப்பூர்.

**நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களா யிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.**

1யோவா 1:6

சிறுவர் பகுதி

# நான் அவரை என் இரண்டு கண்களால் பார்த்தேன்!

எனக்கு பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என்ன விடுமுறை முடியப் போகிறதே என்ற கவலைக்குள் தள்ளப்பட்டிருக் கிறீர்களா? சரி உங்கள் தேர்வு முடிவுகள் யாவும் நல்லபடியாக வந்திருக்கும் என்று தேவனுக்குள் விசுவாசிக்கிறேன். சரி, வாருங்கள் நாம் நேரடியாக பாடத்திற்குள்ளாக போவோம்.

பொதுவாகவே நீதிமன்றங்களில் கண்சாட்சி (அதாவது நடந்ததை நேரில் பார்த்தவர்கள்) தான் மிகவும் நம்பிக்கையான உறுதியான சாட்சி என்று கருதப்படுகிறது. இரண்டு அல்லது மூன்று பேர் ஒரு காரியத்தை ஒரே மாதிரியாக சொன்னால் அது உண்மை என்று கருதப்படும். இவ்வாறு தான் பொதுவாக சாட்சிகள் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சரி, இதெல்லாம் இப்போது எதற்கு என்று தானே கேட்கிறீர்கள்? தெரியும். தொடர்ந்து படியுங்கள். கொரிந்து பட்டணத்தில் இருந்த சபை, இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து உண்மையாகவே உயிரோடு எழுந்தாரா என்று சந்தேகப்பட்டனர். இதற்கு பதில் கொடுக்கும்படியாக பவுல் “பேதுரு, அப்போஸ்தலர்கள் மற்ற 500க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள்” இவர்க ளெல்லாம் “நானும்” இயேசுவைக் கண்டோம் என்று கூறினார். இன்னும் அந்த 500க்கும் மேற்பட்டவர்களில் இன்னும் சிலர் உயிரோடு இருக்கிறார்கள் என்றும் கூறினார். இப்படி சொல்வதின் மூலம் கொரிந்து சபையார் போய் அவர்களிடம் கேட்டு தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை தீர்ப்பார்கள் என்று நினைத்தார். இயேசு கிறிஸ்து உயிரோடு எழுந்தார் என்று நிரூபிப்பதற்கு அநேக கண்சாட்சிகளை (கண்களால் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்த வர்கள்) சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நாம் புதிய ஏற்பாட்டு புத்தகங்களை பார்க்கும் போது, இயேசு, தாம் உயிர்த்தெழுந்த பிறகு தம்மை அநேக முறை பலருக்கு வெளிப்படுத்தினார் என்று பார்க்கிறோம். மகதலேனா மரியாளுக்கும், பின் எம்மாவுக்கு போகின்ற வழியில் இரண்டு அப்போஸ்தலருக்கும், மாற். 16:14 மற்ற அப்போஸ்தலருக்கும் வெளிப்பட்டார். ஆனால், “தோமா” அச்சமயம் இல்லை. மற்ற அப்போஸ்தலர்கள் தாங்கள் இயேசுவை கண்டதாக சொன்ன போது அவன் இயேசுவை தான் தொட்டால் ஒழிய நான் நம்பமாட்டேன் என்று சொன்னான். சில நாட்கள் கழித்து மீண்டும் “தோமா” இருக்கும் போது அப்போஸ்தலருக்கு வெளிப்பட்டு, தோமாவை நோக்கி ஆணி பாய்ந்த என் கைகளை தொட்டுபார் என்று இயேசு கிறிஸ்து சொன்ன போது தோமா அவரை இயேசு என்று நம்பி “என் ஆண்டவரே, என் தேவனே” என்றான்.

பல நாட்கள் கழித்து தமஸ்குவுக்கு போகும் வழியில் பவுலாக மாறிய சவுலுக்கு இயேசு வெளிப்பட்டார்.

ஏன் இயேசு இப்படி எல்லாருக்கும் தன்னை உயிரோடெழுந்தவராக காண்பிக்க வேண்டும்? ஏன் என்றால் தன்னுடைய உயிர்தெழுதலை உறுதி செய்ய அநேக கண்கண்ட சாட்சிகள் தேவை என்று நினைத்திருக்கலாம். 2பேது. 1:16ல் "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளை பின்பற்றினவர்களாக அல்ல. அவருடைய மகத்துவத்தை "கண்ணாரக் கண்டவர்களாகவே" நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையை அறிவித்தோம்" என்று தைரியமாய் கூறுகிறார்.

சரி, இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடம் இயேசு கிறிஸ்து மரித்து, பின்னர் உயிரோடு எழுந்து, பிறருக்கு தம்மை உயிரோடவராக வெளிப்படுத்தினார் என்பதே. இதற்கு தேவன் கொடுத்த வார்த்தைகள் சாட்சியாக இருக்கிறது. மட்டுமல்லாமல் அதை கண்ணாரக் கண்டவர்களும் உண்டு.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**R.A.R. நாயகம்**

## நாளும் நடப்பும்

1. பெட்ரோல் ரூ. 5, டீசல் ரூ. 3, சமையல் கேஸ் ரூ. 50 விலை உயர்த்தப்பட்டுள்ளது.
2. உலக அளவில் பத்திரிக்கை விற்பனையில் இந்தியா 2வது இடத்தை பிடித்துள்ளது. சீனா முதலிடத்தில் உள்ளது.
3. ஆண் வாரிசு இருந்தாலும் முதியோர் ஓய்வூதியம் தமிழக முதல்வர் உத்தரவு.
4. கர்நாடகத்தில் பா.ஜ.க ஆட்சி முதல்வராக எடியூரப்பா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
5. சீனாவில் பூகம்பத்தால் உருவான ஏரிகளால் வெள்ள அபாயம்.
6. பின்லேடனை பிடிக்க அமெரிக்கா புதுயுக்தி.
7. ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியின் கோப்பையை ராஜஸ்தான் ராயல்ஸ் அணி தட்டிச் சென்றது.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**க**டந்த இரண்டு மாதங்களாக, தேவன் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்திருக்கிற சில குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனங்களை நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். கள்ளப் போதகர்கள் தோன்றுவார்கள் என்று தேவன் சொன்னார். மேலும், புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழி விலகிச் செல்லுதல் இருக்கும் என்றும், இயேசு ஸ்தாபித்த ஒன்றான மெய் சபையிலிருந்து வழிவிலகிச் செல்லுதல் இருக்கும் என்று தேவன் முன்னறி வித்திருந்தார். கடந்த மாதக் கட்டுரையின் இறுதியில், அப்படிப்பட்ட தீர்க்க தரிசனங்களில் ஒன்றான 2 பேதுரு 2:1-3 வசனங்களை நாம் விவரமாக ஆராயத் தொடங்கினோம். தயவு செய்து அந்த வசனங்களை மறுபடியும் வாசியுங்கள்.

தேவ ஆவியினால் ஏவப்பட்டு அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லும் போது, எப்படி முன்பு இஸ்ரவேலர்கள் மத்தியில் கள்ளத் தீர்க்க தரிசிகள் இருந்தார்களோ அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள் என்று சொன்னார். மேலும், அந்த கள்ளப் போதகர்கள் கேட்டுக் கேதுவான வேத புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள் என்று சொன்னார். எனவே, இந்த கள்ளப் போதகர்கள் தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள் என்பது, இந்த கள்ளப்போதகர்கள் நித்தியமாக தேவனிடமிருந்து பிரிந்து விடுவார்கள் என்று பொருள்படும்.

ஆனால், தேவன் இதோடு நிறுத்திவிடவில்லை! இந்த கள்ளப்போதகர் களின் செயல்பாடுகளினாலும் அவர்களின் கள்ளப் போதகத்தினாலும் இரண்டு விளைவுகள் ஏற்படும் என்று பட்டியலிடுகிறார். அந்த இரு விளைவுகள் என்ன? முதலாவது, **அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்.** இரண்டாவது, புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து இப்படிப்பட்ட வழிவிலகுதலினால் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்.

பிரியமானவர்களே, தேவன் இங்கே சொல்லுகிறவைகளை தயவு செய்து ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். இன்று கிறிஸ்துவை பின்பற்றாத வர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தை தூஷிப்பது ஏன்? ஏனென்றால், நாங்களும் இயேசுவைத் தான் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்கின்ற பிரிவினைக் கூட்டத்தினர் அவரவர் விருப்பம் போல் வித்தியாசமான காரியங்களை போதிக் கிறார்கள், செய்கிறார்கள். இதனால், கிறிஸ்தவ மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இந்தக் காரியத்தைத்தான் தேவன் அப்போஸ்தலனாகிய பேதுரு மூலமாக தீர்க்க தரிசினமாக உரைத்தார்.

1 யோவான் 4:1யை வாசியுங்கள். இந்த வசனத்தில் தேவன் ஆச்சரிய மூட்டும் வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். அதாவது, அப்போஸ்

தலனாகிய யோவான் மூலமாக முதல் நூற்றாண்டிலேயே கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதாகச் சொல்கிறார். எனவே அப்போதே கள்ள தீர்க்க தரிசிகள் இருந்ததாலும், இப்போது இருக்கிறதாலும் எந்த இரண்டு நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்று தேவன் அந்த ஆதிக்கிறிஸ்தவர்களுக்கும், உங்களுக்கும், எனக்கும் கட்டளையிடுகிறார்?.

முதலாவது, நாம் எல்லா ஆவிகளையும் நம்பக்கூடாது. அதாவது, நாங்களும் தேவனுடைய வார்த்தையைத்தான் சொல்லுகிறோம் என்பவர் களின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது. இரண்டாவது, அந்தக் கள்ளப்போதகர்களை நாம் சோதிக்க வேண்டும். சரி, அவர்கள் தேவனைப் பற்றியும், அவருடைய வார்த்தைகளைப் பற்றியும் போதிக்கும் போது நாம் அவர்களை சோதிப்பதின் நோக்கம் என்ன? அவர்கள் தேவனாலுண்டான வர்களே என்று நாம் சோதித்தறிய வேண்டும். அதாவது, அவர்கள் போதிக் கிறவைகளை மிக ஜாக்கிரதையாக ஆராய்ந்து, தேவன் தம்முடைய வார்த்தை களில் சொல்லியிருக்கிறவைகளை அவர்கள் போதிக்கிறார்களா என்று நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

நாம் எப்படியாக அவர்களை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் அந்த பெரோயா பட்டணத்தாரைப் போல இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதாவது, போதிக்கப்படுகிற வைகள் மற்றும் செய்யப்படுகிறவைகளுக்கு தேவனுடைய வார்த்தைகளின் அதிகாரம் உள்ளதா என்பதைத் தீர்மானம் செய்ய தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். (அப். 17:11).

பிரியமானவர்களே, நீங்களும், நானும், மற்றவர்கள் போதிக்கிற வைகளுக்கு தேவனுடைய வார்த்தையில் அதிகாரம் இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேத வாக்கியங்களை தினந்தோறும் ஆராய்ந்து பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

வெளிப்படுத்தின விசேஷம் 2:2யை வாசியுங்கள். இந்த வசனத்தில் இயேசு எபேசு பட்டணத்தில் இருந்த தம்முடைய சபையின் கிரியைகளையும், பிரயாசத்தையும், பொறுமையையும் புகழ்ந்து பேசுகிறார். மேலும், நம் இயேசு அந்த சபையார் **பொல்லாதவர்களை சகிக்கக்கூடாதவர்கள்** என்றும் அவர்களைப் பற்றிப்பேசினார். வேறு எந்த காரியத்திற்காக நம் மீட்பர் அந்த எபேசு பட்டணத்து சபையாரை புகழ்ந்து பேசுகிறார்?.

அந்த எபேசு பட்டணத்து சபையார், **தங்களை அப்போஸ்தலர்கள் என்று சொல்லிக் கொண்ட சிலரை சோதித்தறிந்து அவர்களைப் பொய்ய ரென்று கண்டறிந்தற்காக** நம் அருமை இரட்சகர் புகழ்ந்து பேசுகிறர். நாம் இப்போது மறுபடியும், ஆதிசபையில் கள்ளப் போதகர்கள் இருந்ததையும், புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழி விலகிச் செல்லுதல் தொடங்கி விட்டதையும் பார்க்கிறோம்.

இவைகள் எல்லாம் இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசனம் உரைத்தபடியே நிறைவேறின. இது, சபை வரலாற்றைப் பற்றிய நம்முடைய படிப்பின் அடுத்தக் கட்டத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது. கீழ்க்காண்பவைகள் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழிவிலகிச் செல்லுதலில் முக்கியமானவைகள்.

## பிஷப் பதவியின் ஆரம்பம்

நாம் ஏற்கனவே பார்த்தபடி, தேவனுடைய சபைக்கான ஆளுகை முறை தேவனுடைய சபையை கண்காணிப்பதற்கு மூப்பர்களை ஏற்படுத்துவதாகும். அதுவும், இந்த மூப்பர்கள் தேவனுடைய தகுதியம்சத்திற்கு உட்பட்டால்தான் மூப்பர்களாக முடியும் (அப். 14:23; 1தீமோத்தேயு 3:1-7). ஆயினும், மனிதர்கள் தேவனுடைய தெய்வீக மாதிரியிலிருந்து இரண்டாம் நூற்றாண்டின் இறுதி யிலிருந்து வழிவிலகிச் செல்லத் தொடங்கி விட்டார்கள். சில சபைகளில், மூப்பர்களுள் ஒருவர் மற்ற மூப்பர்களுக்கு மேல் தலைவராக நியமிக்கப்பட்டார். மூப்பர் என்பதைத்தான் ஆங்கிலத்தில் பிஷப் என்று அழைக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இந்த நபர் பிஷப் என்று அழைக்கப்பட்டு எல்லோருக்கும் மேலாக சர்வ அதிகாரத்தையும் செலுத்த ஆரம்பித்து விட்டார்.

## பிராந்திய ஆலோசனைச் சங்கங்களின் வளர்ச்சி

ஒரு பிராந்தியத்தில் உள்ள அநேக சபைகள் சேர்ந்து ஒரு பெரிய கூட்டமாக கூடுவார்கள். அவர்கள் பொது நலனுக்காக அப்படிக் கூடி அநேக காரியங்களை விவாதிப்பார்கள். ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி கிறிஸ்துவின் சபை, சுய சார்புள்ளதும், சுய ஆளுகை அமைப்பை உடையதுமாயிருக்கிறது என்கிற தேவனுடைய முறைமையை இது மீறுகிறதாக இருக்கிறது. மூப்பர்கள் எங்கே ஊழியம் செய்கிறார்களோ அந்த பிராந்திய சபையின் மீது மட்டும் தான் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. (1 பேதுரு 5:1,2; அப். 20:28).

## விசேஷித்த மத குருக்களின் உருவாக்கம்

சாதாரண ஜனங்களுக்கும், மத குருக்களுக்கும் இடையில் ஒரு பெரும் வித்தியாசம் ஏற்படுத்தப்பட்டது. இந்த இடைவெளி வளர்ந்து கொண்டே சென்றது. இந்த விசேஷித்த மத குருக்கள் மாத்திரமே தேவனோடு தொடர்ந்து தொடர்பு கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டிருந்தது. எனவே, சாதாரண மக்கள் தேவனோடு கிட்டிச் சேர இந்த மத குருக்களையே சார்ந்து இருக்க வேண்டி இருந்தது. இந்த காரியத்தை அப்படியே புதிய ஏற்பாட்டில் தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆசாரியனாக இருக்கிறான் என்பதோடு ஒப்பிட்டுப்பாருங்கள். தயவு செய்து, கீழ்காணும் இரண்டு வசனங்களில் தேவன் சொல்கிற காரியங்களை கவனியுங்கள்.

1 பேதுரு 2:5யை வாசியுங்கள் 1 பேதுரு 1:1,2 வசனங்களின்படி அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த நிருபத்தை ஏற்கனவே தேவனுக்கு கீழ்ப்படிந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களுக்கு

எழுதினார். அதாவது, அவர்கள் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கத்தினர்கள். இந்த கிறிஸ்தவர்களை தேவன் எப்படியாக விவரிக்கிறார்? ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் ஒரு ஆசாரியர் என்று தேவன் விவரிக்கிறார். இதன் பொருள், கத்தோலிக்க சபைகளிலும், மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மற்ற சபைகளிலும் நாம் காண்கின்ற விசேஷித்த ஆசாரித்துவ முறைமை **இல்லை** என்பதாகும். மேலும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுக்கேற்ற ஆவிக்குரிய பலிகளை செலுத்த முடியும். அதாவது, சபையில் உயர் பதவியில் இருப்பவர்கள் நியமித்த விசேஷித்த ஆசாரியர்கள் மூலமாக நாம் பலிகளை செலுத்த வேண்டிய அவசியமில்லை. மாறாக, இந்த பலிகளை நாம் யார் மூலமாக செலுத்த வேண்டும் என்று தேவன் சொல்கிறார்? ஆம், நாம் இந்த ஆவிக்குரிய பலிகளை நம்முடைய மகாபிரதான ஆசாரியர் மூலமாக செலுத்த வேண்டும், வேறு எந்த மனிதன் மூலமாகவும் அல்ல! நம்முடைய ஆவிக்குரிய பலிகளை தேவனிடத்தில் அவருடைய பிரியகுமாரன் மூலமாக செலுத்தத்தக்கதாக நாம் ஒவ்வொருவரும் ஆசாரியராக இருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் எவ்வளவு பெரிய சிலாக்கியம்!.

1 பேதுரு 2:9ல் நம் தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் எப்படியாக விவரிக்கிறார்? **ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஒரு ஆசாரியனாக விவரிக்கிறார்.** அது மாத்திரமல்ல, நாம் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயிருக்கிறோம். இது தெளிவாகவே, ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிற இயேசு கிறிஸ்துவோடு நமக்கிருக்கிற உறவின் நிமித்தமாகத்தான் இந்த சிலாக்கியம் (வெளி 17:14). உண்மையாகவே, இயேசு நம்முடைய பாவங்களை தண்ணீர் ஞானஸ்நானத்தில் தம்முடைய இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கும் போது, நாம் தேவனுக்கு ராஜாக்களும், ஆசாரியர்களுமாயிருக்கிறோம் (வெளி. 1:4-6). இந்தத் தெளிவான வசனப் பகுதியிலிருந்து **இந்த விசேஷித்த ஆசாரிய முறைமையின் வளர்ச்சி** கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து மற்றுமொரு வழிவிலகிச் செல்லுதல் என்ற முடிவுக்கு வந்து விடலாம்.

ஒரு பிஷப், ஒரு பிராந்தியம், மாகாணம், தேசம் அல்லது ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியைக் கட்டுபடுத்துவதின் வளர்ச்சி பட்டணத்து பிஷப்கள் ஒருவருக்கொருவர் அதிகாரத்தை செலுத்த வழிவகுத்தது. அடுத்து, இந்த பிஷப்களின் மீது மதகுரு நியமிக்கப்பட்டார். நாம் ஏற்கனவே பார்த்தபடி புதிய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட பதவி ஏதும் இல்லை!. புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழி விலகிச் செல்லுதல் எப்படி பல கட்டங்களாக நடைபெற்றது, நடைபெறுகிறது என்பதை கவனியுங்கள். சாத்தான் இப்படித்தான் கிரியைச் செய்கிறான்! எனவே தான், நீங்களும், நானும் இப்படிப்பட்ட வழி விலகிச் செல்லுதலிருந்து நம்மை நாம் தொடர்ந்து காத்துக் கொள்ள வேண்டும். கர்த்தருக்குச் சித்தமானால், இன்னும் அநேக வழிவிலகிச் செல்லுதல்களை அடுத்த மாதம் நாம் சேர்ந்து படிக்கும் போது பார்க்கலாம்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

# நாம் ஏன் அந்நியரை உபசரிக்க வேண்டும்?

**கி**றிஸ்துவுக்குள் அன்பான தேவ ஜனமே உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. வேதம் நாம் இவ்வுலகில் வாழ அநேக ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் சொல்லியிருக்கிறது. விசேஷமாக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் இயேசுவின் சீஷர்களாகிய நமக்கு அப்போஸ்தலரின் உபதேசம் உயிரினும் மேலாக இருக்கிறது. அதில் ஒரு ஆலோசனையே நம்முடைய இந்தக் கட்டுரையின் தலைப்பு. கடந்த ஏலகிரிமலை 11-வது வேனிற்கால வேதாகம முகாமில் இத்தலைப்பில் பேச வைத்த திருமறை ஆசான் ஆசிரியர் மற்றும் காங்கயம் கிறிஸ்துவின் சபை ஊழியராகிய அன்பு சகோதரருக்கு என் நன்றி உரித்தாகுக.

பரிசுத்தவான்களின் குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள் (ரோமர் 12:13) நாம் வழக்கமாக செய்யக் கூடிய ஒன்றை தேவன் எப்போதும் வேதத்தில் கட்டளையாகக் கொடுப்ப தில்லை என்பதை நினைவில் வையுங்கள். யாரும் தங்கள் வீட்டிலுள்ள சிறு பிள்ளைகளிடம் "சரி நேரமாகிறது மண்ணில் போய் விளையாடு என்றோ, தண்ணீரில் போய் விளையாடு என்றோ சொல்வதில்லை அல்லவா?" அது போலவே மனிதன் செய்ய தயங்குகிற அல்லது செய்வது போல் பாசாங்கு செய்கிற இந்த "அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" என்னும் செயல் நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. பொதுவாக மனிதன் தனக்கு உதவி செய்பவருக்கு மாத்திரமே பதில் உதவும் எண்ணம் கொண்டவனாக இருக்கின்றான். இதன் அடிப்படையில் தான் திருமண அன்பளிப்பு (மொய்ப்பணம்) போன்றவை அமைகின்றது. ஆனால், அப்போஸ்தல உபதேசம் "யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை செய்யக்கடவோம்" (கலாத் 6:10) என்று போதிக்கின்றது. நம் ஆண்டவரின் புகழ் வாய்ந்த உவமையாகிய "நல்ல சமாரியன்" உதாரணமும், உபசரிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. தேவனுடைய வார்த்தையின் சிறப்பை நாம் கவனிக்கும் போது, "உபசரியுங்கள்" என்று வெறுமனே சொல்லாமல் "உபசரிக்க நாடுங்கள்" என்று கூறுவதின் நோக்கம்; நாம் அச்செயலை விருப்பத்தோடே, மனப்பூர்வமாய்ச் செய்ய வேண்டுமென தேவன் எதிர்பார்க்கின்றார்.

மனுஷன் முகத்தைப்பார்க்கிறான், தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார் என்கிறார் சாமுவேல் தீர்க்கதரிசி. நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்படும் பழைய ஏற்பாட்டுக் கட்டளைகள் மாம்ச சம்பந்தப்பட்டது. அப்போஸ்தலருடைய உபதேசமாகிய கிறிஸ்துவின் பிரமாணம் இருதயம் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. பொதுவாக நமக்கு அந்நியரை உபசரிக்க எது தடையாக இருக்கிறது? நமது பொருளாதாரம் குறைந்துவிடும் என்ற பயம் தான் அதற்குக் காரணம். ஆனால், இரகசியம் என்னவென்றால், யாரெல்லாம் பொருளாதாரத்தைக் குறித்து கவலைப்படாமல் அந்நியரை உபசரித்தார் களோ அவர்களே நன்றாய் வாழ்க்கையில், சமுதாயத்தில் உயர்வைப் பெறுகிறார்கள். வேதம் காட்டும் வழி இதுவே. தேவன் மனிதனிடம்,

கொடுத்துப்பார்! நான் நிச்சயம் கொடுப்பேன் என்று சவால் விடுகிறார் (மல்கி 3:10) ஏழைகளைப் பற்றி சிந்திப்பவன் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டவன் என்று (சங். 41:1) வேதத்தில் காண்கிறோம். இவ்வுலகின் உண்மையான ஒரே ஞானி சாலமோன், "உதாரணகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்" (நீதி 11:25) என்றான். ஒரு மனிதனுக்கு மன நிறைவான வாழ்வு அமைய மற்றவரை உபசரிக்கும் குணம் மிக, மிக அவசியமாகும். விசேஷமாக தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அந்த சந்தோஷத்தை இழந்து போகக்கூடாது என்பதற்காகவே தேவன் இந்த அருமையான ஆலோசனையைத் தந்துள்ளார்.

நமதாண்டவர் இக்குணம் நம்மில் வளர வேண்டி வாக்கு தத்தமாகவே கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கூறுகிறார். கொடுங்கள்.. பதிலாக உங்களுக்கு அதிகமாக கொடுக்கப்படும் (லூக் 6:38) உபசரிக்கும் குணம் நமக்கு இருக்குமானால் நாம் தேவனுக்கு பிரியமானவர்களாக மாறலாம் (2கொரி 9:7) கொர்நேலியு வீட்டிலிருந்து வந்த புறஜாதி ஜனங்களையும் பேதுரு உபசரித்தார் (அப். 10:23) பிற்பாடு நாம் உபசரிப்பதில் முறுமுறுப்பில்லாமல் இருக்கக் கட்டளையிட்டார் (1பேது 4:9) பல சமயங்களில் உபசரிக்கும் வேளைகளில் பலர் அதைக் குறித்து வருத்தமடைவதை பார்க்கிறோம். மார்த்தாளும் அப்படிச் செய்து ஆண்டவரால் கடிந்து கொள்ளப்பட்டாள். **உபசரிப்பு குணத்தோடு சந்தோஷத்தையும் நாம் காண்பிக்க கடனாளிகளாய் இருக்கிறோம்.** நமதாண்டவர் நமக்காக சிலுவையில் மரிப்பதற்கு தேவனுக்குக் கீழ்படிந்து தம்மைத்தாமே தாழ்த்தினார். நாமும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். மன வருத்தத்தோடும், கட்டாயத் தோடும் செய்வோமானால் தேவன் நம்மில் பிரியமாயிருக்கமாட்டார் (2கொரி 9:7) எபிரெயருக்குப் பவுல் எழுதும் போது இவ்விஷயத்தை மறவாதிருங்கள் (எபி. 13:2) என்றார். ஏனெனில், இக்குணம் அவர்கள் முற்பிதாக்கள் வழிவந்த ஒரு பழக்கமாகும். உதாரணமாக ஆபிரகாம் தூதர்கள் என்று அறியாமலேயே அவர்களை உபசரித்தான் (ஆதி. 18:3) மேலும் லோத்துவும் தூதர்களை உபசரித்து பேரழிவிலிருந்து தப்பினான் (ஆதி. 19:2). அதே வண்ணமாய் இன்றும் அநேகர் தங்கள் வாசற்படியில் எழுதி வைக்கும், "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும்" (ஆதி. 24:31) என்ற பிரபலமான வசனம், ரெபேக்காளின் அண்ணன் லாபான் சொன்னதுதான்.

எனக்கு அருமையான தேவனுடைய பிள்ளைகளே நாம் அந்நியரை உபசரிக்க முதலாவது மனதில் முடிவெடுத்து தீர்மானிக்க வேண்டும். அதையே பவுல் நாடுங்கள் என்ற வார்த்தையில் வலியுறுத்துகிறார். மேலே லாபான் குறிப்பிட்டதைப்போலத்தான் கடைசி நாட்களில் ஆண்டவர் இயேசுவும் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள் என்று அழைப்பார். அந்த அழைப்பை நாம் பெறுவதற்கு உபசரிக்கும் குணத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும் (மத். 25:35). ஆக உபசரிப்பு - "அழைப்பில்" தான் ஆரம்பிக்கின்றது. மோசே மாமன் ரெகுவேல் விருந்தினரை ஏன் அழைத்து வரவில்லை? என்று தன் மகள்களிடம் கோபித்துக் கொண்டான் (யாத் 2:20) நாமும் கூட விருந்தினரை, அந்நியரை வரவேற்கவும், மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும் நம் பிள்ளைகளுக்கு

போதிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். மேலும்உள்ளே வந்தபின் சிலர் அவர்களை கண்டு கொள்வதேயில்லை. ஆனால், வேதத்தில் பாருங்கள் உணவு தயாரிக்கச் சற்று நேரமாகும் போது சற்றுக்காத்திருங்கள் என்று மனோவா சொல்கிறார் (நியா 13:15) அவசரப்பட்டு தன் ஆசீர்வாதத்தை இழந்த ஏசாவைப் போலவும் (எபி. 12:16,17) நாம் இருக்கக்கூடாது என எச்சரிக்கப்படுகிறோம்.

அந்நியரை உபசரிப்பதைக் குறித்து வேதம் நமக்கு அருமையான, முன் உதாரணங்களை தருகிறது. அதில் ஒருத்தி கனம் பொருந்திய சூனேமியாள் (2 ராஜா 4:8) கனம் பொருந்தி என்பதற்கு பொருளாதாரத்திலும், மரியாதையிலும் சமுதாயத்திலும் உயர்ந்து இருப்பவள் என்று பொருள்படும் அப்படிப்பட்டவள் தேவனுடைய மனுஷனாகிய எலிசாவை போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள். எனக்கு அருமையான விசுவாசியே நாமும் கூட உபசரிக்கும் முறையில் வருந்தி, வற்புறுத்த வேண்டும் என்ற பாடத்தைக் கற்க வேண்டும். புதிய ஏற்பாட்டு லீதியாளிடமும் இதே குணத்தை நாம் கண்டு (அப். 16:15) ஆச்சரியப்படுகிறோம். இப்படி யெல்லாம் உபசரித்து விட்டு பதிலுக்கு நாம் மதிப்பையோ நன்றியையோ அவர்களிடமிருந்து எதிர்பார்க்கத் தேவையில்லை. நமக்குப் பலன் பரலோகத் தின் தேவனிடமிருந்து நிச்சயமாகக் கிடைக்கும் என்பதை நாம் நினைவில் கொள்வோமாக (எபி. 6:10, மத். 6:4) இதைத்தான் ஆண்டவர் இயேசுவும் ஒரு கலசம் தண்ணீருக்கூட உரிய பலன் நிச்சயம் பெறுவீர்கள் என்றார்.

உலகத்திலேயே மிக உயர்ந்தப் பாராட்டை பரலோக தேவனிடமிருந்து பெற்றவன் யோபு. என் தாசன், உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன், உபத்திரவத்தில் இன்னும் உறுதியாய் நிற்பவன் என்று அடுக்கடுக்காக புகழப்பட்டவன். இது ஒரு தாயானவன் தன் பிள்ளையை, செல்லம், வைரம், தங்கம் என்று கொஞ்சுவதைப் போல அழகானப் பாராட்டாக உள்ளது. அப்படிப்பட்ட யோபுவின் குணாதிசயம் என்னவென்று தெரியுமா? யோபு 31:16,17ல் எளியவர்களையும், விதவைகளையும் அநாதை பிள்ளைகளையும் போஷித்துக் கவனித்தப்பிறகே அவன் சாப்பிட்டானாம்! என்னவொரு அருமையான பண்பு பாருங்கள். நம்மில் பலர் தன் மனைவி சாப்பிட்டாளா என்று கூட கவனிப்பதில்லை என்பது யோசிக்க வேண்டிய விஷயம். மேலும் அந்நியர்கள் தங்க வசதி செய்து கொடுத்துள்ளான் (யோபு 31:32) இதிலிருந்து தான் இந்த சமுதாயம் கெஸ்ட் ஹவுஸ், கெஸ்ட்ரூம் போன்ற நல்ல வழக்கத்தை கற்று கொண்டிருக்கிறது. தேவன் யோபுவைப்புகழ இதுவும் ஒரு காரணம். நாமும் யோபுவை பின்பற்றுவோம். அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் (எபி 13:16).

புறஜாதிகள் இரட்சிப்பில் முதற்பலன் ஆக தெரிந்துகொள்ளப் பட்டவன் கொர்நேலியு (அப். 10:1-4) அவனுடைய ஜெபம் பரலோகத்திற்கு எட்டினதற்கு முக்கியக்காரணம் தன் வருமானத்திலிருந்து ஜனங்களுக்கு அவன் **மிகுந்த தருமங்களை செய்தான் என்பதாகும்**. தேவனுடைய

வல்லமையையும், அன்பையும், வழி நடத்துதலையும் உண்மையாய் உணரும் ஜனங்கள் இந்த உபசரிக்கும் குணத்தை இயல்பாகவே பெறுகிறார்கள் என்பதற்கு பிலிப்புப் பட்டண சிறைச்சாலை அதிகாரி ஒரு நல்ல உதாரணம் (அப். 16:33,34). பவுலையும், சீலாவையும் அவன் உபசரித்து **மனமகிழ்ச்சியடைந்தான்** என்று வாசிக்கின்றோம். தேவனுடைய ஜனங்களை உபசரிப்பது மகிழ்ச்சிக்குரியது. அதே போன்று பவுலும் அவனைச் சார்ந்தவர்களும் கப்பற்சேதத்தில் சிக்கி ஒரு தீவில் ஆதரவற்று ஒதுங்கிய போது அத்தீவின் முதலாளி அவர்களை ஏற்றுக்கொண்டு மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான் (அப். 28:7) நாமும் அவ்விதமாக வருபவர்களை ஏற்க வேண்டும், மட்டுமல்ல அவர்களை அக்கறையோடு, முகங்கோணாமல் உபசரிக்கும் பக்குவத்தில் வளர வேண்டும். பட்சமாய் என்ற வார்த்தை ஆழமான அர்த்தமுடையது. உள்ளான அன்போடு வரவேற்பதும் தொடர்ந்து அவர்கள் தேவைகளை கவனிப்பதும் தேவையான ஒன்றாகும். எல்லாவற்றுக்கும் மேலாக தேவன் ஜனங்களுக்கு இக்கட்டளையைக் கொடுத்ததின் முக்கிய நோக்கம், எகிப்தில் அவர்களும் ஒரு காலத்தில் அந்நியராய் இருந்தனர் (யாத் 22:21) என்பதாகும். தேவன ஆசீர்வாதம் பெறுவதில் நாமும் கூட இஸ்ரவேலருடைய காணியாட்சிக்கு புறம்பானவர்களாயிருந்தோம். ஆகையால், பழைய ஏற்பாட்டிலும் சரி (லேவி 19:34) புதிய ஏற்பாட்டிலும் சரி **உன்னைப் போல பிறனை நேசி** என்ற கட்டளை பிரதானமாய் அமைந்துள்ளது. சிலர் வெறுமனே வாயின் வார்த்தைகளில் அன்பு கூர்ந்து செயலில் காண்பிக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களின் விசுவாசம் உயிரற்றது என்று வேதம் (யாக். 2:15-17) எடுத்துக்காட்டுகிறது. இஸ்ரவேலரின் வனாந்திரப் பயணத்தின் போது வழிவிடாத ஏதோமியர் (எண் 20:18-21) தாவீதுக்கும் அவன் சிநேகிதருக்கும் உணவு கொடாத நாபால் (1 சாமு 25:10,11) ஆகியோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

எனக்கருமையானவர்களே நாம் இதை ஏன் இவ்வளவு விவரமாகப் பார்க்க வேண்டும்? என்று கேட்டால் இவையெல்லாம் நமக்கு திருஷ்டாந்தங்களாக அதாவது பின்பற்றுவதற்காக எழுதப்பட்டுள்ளது. மேலும் இதிலிருந்து கற்றுக்கொள்ள போதனையாகவும் இவைகள் வேதத்தில் எழுதப்பட்டுள்ளன. ஒருவன் நன்மை செய்ய அறிந்தும் செய்யாமற் போனால் அது அவனுக்கு பாவம் அல்லவா? எனவே தேவ ஆலோசனைக்கு கீழ்படிந்து சாபத்திற்கு விலகி ஆசீர்பெறுவோம். கட்டளைகள் நம் பிரயோஜனத்திற்கும் சீர் பொருந்தவுமே உள்ளன. அவற்றை கொஞ்ச நாட்கள் செய்து பின்பு விட்டு விடுவதல்ல, உபசரிப்பை நம் வழக்கமாக் கொள்வோம். ஆனால், நம் வருமானத்திற்கு மீறி அல்ல. தேவன் நமக்குத் தந்தருளும் பெலத்தின்படியே கண்டிப்பாய் சிலருக்காகிலும் உதவி செய்வோம் (1பேது 4:9-11) தேவனுடைய கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

**K. பாண்டியன்**, பாண்டிச்சேரி.

# தேவனை மகிமைப்படுத்துங்கள்


"....நான் என் பிதாவை கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள், நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்" (யோவான் 8:49-50).

தேவனை உலகிற்கு காண்பிக்கவே இயேசு புவியில் வெளிப்பட்டார். இயேசு, பிதாவுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்தார், இருக்கிறார். இப்பூலோகத்தில், இருந்தபோது, தன் பிதாவை கனம் பண்ணவும் அவரையே மகிமைப்படுத்தவும் நாடினார். அவர் தனக்கென்று மகிமையை தேடவில்லை. அவர் அப்படி தேடியிருந்தால் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷச் சாயலாயிருக்கமாட்டாரே (பிலி 2:7).மேலும், அடிமையின் சின்னமாகிய சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தி, கீழ்படிந்திருக்க வேறு காரணம் ஒன்றுமில்லையே. சிலுவையில் அறைந்து கொல்லுதல் ஒருவரையும் மகிமைப்படுத்தவில்லை; மாறாக அது அறையப்பட்டவனை சாபமாக்கிற்று (உபா21:23) சிலுவை ஒருவனின் அடிப்படை குணாதிசயங்களை காண்பிக்கிறது. மகிமைக்கு பாத்திரமாயிருந்து அதை எதிர்பாக்கிற தேவை (பிதாவை) மகிமைப்படுத்த வேண்டும் என்று பாவமில்லாதிருந்த, தெய்வீகமாய் மாமிசமான இயேசு தன் மகிமையை துறந்து இந்த கோரமரணத்தின் சாயலை ஏற்றுக் கொண்டார். அவர் தன் பிதாவின் சித்தத்திற்கு முழுமையாய் தன்னை அற்பணித்தார்.

தேவன் மகிமைக்கு உரியவராய் இருக்கிறபடியால் அதை எதிர்பார்க்கிறார் இயேசு, தேவனை மகிமைப்படுத்துவதில், தவறு ஏதும் காணவில்லை தேவனை துதிக்கும்படி, கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார். எல்லா படைப்பும் அவரை மகிமைப்படுத்துகிறது. நாம் ஏன் மகிமைப்படுத்தக்கூடாது?தேவன் எதிர்பார்ப்பதால் அவரை மகிமைப்படுத்துவதில் நாம் வெட்கப்படாதிருப்போமாக அவரை மகிமைப்படுத்தினால் கிறிஸ்து வெளிப்படும் காலத்தால் நாம்மை மகிமைப்படுத்துவார் (ரோமர் 8:18).

எல்லா வழிகளிலும் அவரை எப்பொழுதும் மகிமைப்படுத்த இப்பொழுதே தீர்மானம் செய்வோம்.

**தாமஸ் ஆர்.டாக்லிங்**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

**Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures**

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

**திருமறை ஆசான்** இதழ் ஆசிரியரின்
**திருமறைதியானம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 9:45 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.